

# திருமுறைகள் உணர்த்தும் மறைபொருள் உண்மைகள்

தமிழண்ணல்

மீனாட்சி புத்தக நிலையம்

# திருமுறைகள் உணர்த்தும் மறைபொருள் உண்மைகள்

தமிழண்ணல்

மீனாட்சி புத்தக நிலையம்
48, மயூரா வளாகம், தானப்ப முதலி தெரு,
மதுரை – 625 001.

முதற் பதிப்பு : திருவள்ளுவர் ஆண்டு 2046, ஆடி மாதம், 2015, ஆகஸ்டு
**விலை.ரூ.30/-**

நூல் விவரப்பட்டியல்

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | திருமுறைகள் உணர்த்தும் மறைபொருள் உண்மைகள் |
| ஆசிரியர் | : | தமிழண்ணல் |
| நூலின் தன்மை | : | சமய விளக்கம் |
| விலை | : | ரூ. **30.00** |
| பக்கங்கள் | : | 44 |
| எழுத்து | : | 11 புள்ளிகள் |
| நூல் அளவு | : | 14 X 22 செ.மீ. டெம்மி |
| பைண்டிங் | : | அட்டைக் கட்டு |
| தாள் | : | வெள்ளைத்தாள் |
| வெளியீடு | : | சிந்தாமணிச் செல்வ வெளியீடு |
| ஒளி அச்சு | : | ஆதவன் பிரிண்டர்ஸ், மதுரை. |
| அச்சிட்டோர் | : | கணபதி எண்டர்பிரைசஸ், சென்னை-5 |

**MEENAKSHI PUTHAKA NILAYAM**
Mayura Complex, 48, Dhanappa Mudali Street, Madurai - 625 001.
☎ Off : 2345971 Resi : 2560517
E-Mail: meenakshiputhakam@hotmail.com

# நூன்முகம்

என் முனைவர் பட்ட ஆய்வு சங்க இலக்கிய மரபுகள் பற்றியது. பல ஆண்டுகள் அதைக் கற்பதில் கழிந்தது.

அதனால் சமய இலக்கியங்களைக் கற்பது தடைப்பட்டது. திராவிட இயக்கச் சார்பினாலும் இடைக்கால இலக்கியங்களில் குறிப்பாக பக்தி நூல்களில் மன ஈர்ப்பின்றிப் போனது.

ஆசிரியப் பணி நிறைவுற்று, ஓய்வுக் காலம் தொடங்கியது தொட்டு இவற்றைப் பார்க்கப் படிக்க ஆய்வு மேற்கொள்ளத் தூண்டுதல் ஆனது.

அப்போதுதான் 'அடடே! தவறு செய்து விட்டோமே' என எண்ண நேர்ந்தது. சங்க இலக்கியத்துடன் இடைக்காலப் பக்தி இலக்கியங்களையும் படித்திருந்தால், நன்றாக இருந்திருக்குமே என மனம் எண்ணி ஏங்கியது. ஊருக்குப் போக வேண்டியவன் வண்டியைத் தவற விட்ட கதை ஆயிற்று.

சிவநெறி மெய்யியல் ஓர் அறிவியல் போன்றது. அதை எளிமைப்படுத்தி, அதில் படிந்து விட்ட சமஸ்கிருதக் கறையை முற்றிலும் நீக்கி, எட்டாம் வகுப்பு மாணவனுக்கும் சிவநெறிச் செவ்வியல் விளங்கும்படி ஆய்வுரை பல எழுதியிருக்கலாமே என்று தோன்றியது.

இந்நூலில் உள்ள கட்டுரைகள், கடந்த பத்தாண்டுகளில் அவ்வப்போது எழுதப்பட்டவை. அவற்றைச் சீர்மைப்பட ஒரு நூலாக்கியதால், ஒரு சில கருத்துக்கள் திரும்ப வரலாம். வரினும் அதுவும் நல்லதே, இப்புதிய பார்வைகள் பற்றிய எதனையும் நினையாத நம் மக்களுக்கு, திரும்பத் திரும்ப நினைவூட்டவே வேண்டும்.

இந்நூலில் நம் சமயச் சிந்தனைகள் புதுமை நோக்கித் திரும்பும் படியும் புரட்சி வேண்டும் என ஆர்வம் ஏற்படும் படியும் எழுதப்பட்டுள்ளன. இவ்வாறு உறுதியாக நம்பி இந்நூலை உங்களிடம் தருகின்றேன்.

ஏரகம், சதாசிவநகர்,
732, வண்டியூர் முதன்மைச் சாலை,
மதுரை – 625020.

தமிழண்ணல்

# திருமுறைகள் உணர்த்தும் மறைபொருள் உண்மைகள்

## இடைக்காலத் தடுமாற்றங்களும் தமிழ்ச் சமயங்களின் எதிர்நீச்சலும்

## நம்பி ஆரூரர் (சுந்தர மூர்த்தி நாயனார்)

திருத்தொண்டர் புராணப் பெருங்காப்பியத்தின் 'தலைவர்' நம்பியாரூரரே என்பதில் எட்டுணையும் ஐயம் இல்லை. திருமலைச் சிறப்பு - தொடக்கமாகும். அங்கேயே நம்பி ஆருரரின் பழம் வரலாறு தொடங்கி விடுகிறது. சோழத் திருநாட்டுச் சிறப்பு, திருவாரூர் திருநகரச் சிறப்பு. அவர் பாடிய திருத்தொண்டராம் திருக் கூட்டச் சிறப்பு முறையே கூறப்படுகின்றன. சேக்கிழார். தம்மை ஆதரித்த சோழ மன்னனைக் கருதியும், நம்பி, ஆரூரில் பெரிதும் வாழ்ந்து, அப்பெருமானின் பெயரையே கொண்ட காப்பியத் தலைவரானதைக் கருதியும் இவ்வாறு தம் காப்பிய அமைப்பை மேற்கொண்டாராதல் வேண்டும். பிறகு முதலில் வருவது 'தடுத்தாட் கொண்ட புராணம்' ஆகும். ஏனையன அனைத்தும் அவ்வந் நாயன்மார் பெயர்களால் கூறப்பட்டிருக்கவும், நம்பியாரூர நாயனார் புராணம் மட்டும் 'தடுத்தாட் கொண்ட புராணம்' எனக் குறிக்கப்பட்டதன் காரணம் என்ன? காப்பிய முழுமைக்கும் பொருந்திவரும் 'பாவிகம்' போல்வது இது.

நம்பி ஆருரரை, இறைவன் வன்தொண்டன் என அழைத்தார். ஏனைய அடியார்கள் தம்பிரான் தோழர் என்றனர். சேக்கிழார் ஓரிடத்தில் 'தமிழ்நாதன்' எனக் கூறுகின்றார். (86). நூன் முழுவதும் 'திருத்தொண்டத் தொகையின் விரிவே பரவி நிற்பதாலும் விறல்மிண்டர், கோட்புலியார் போலும் பல அடியவர்தம் தொடர்பும் நினைவும் வரலாறும் ஆரூரரிடம் காணப்படுவதாலும் குறிப்பாக 'ஏயர்கோன் கலிக்காம நாயனார்' வரலாற்றில் பெரும்பகுதி இவர்தம் வரலாறாகவே இருப்பதாலும் சேரமான் பெருமாள் நாயனாராம் கழறிற்றறிவார் புராணத்துள் இவர் வரலாறும் கலந்திருப்பதாலும் இறுதி வெள்ளை யானைச் சருக்கத்தில் இவர்கள்

இருவரின் சிவப்பேறு குறிக்கப்படுவதுடன், இக்காப்பியம் நிறைவுறுவதாலும் இதனை நாம் இந்நம்பியாரூரர்தம் வரலாறு எனும் பொன்னரி மாலை, அடியார்களின் வரலாறுகளாகிய முத்துக்களால் கோக்கப்பட்டது போன்றதென எண்ணி மகிழலாம். நாட்டுச் சிறப்பு, நகரச்சிறப்பைக் கூறி தமக்கு முன்னோடியாகிய நம்பியாரூரரை காப்பியத் தலைவராக்கிய சேக்கிழார் திறன் வியப்பளிப்பதாகும்.

ஆரூரர்க்கு, பழம் பெயராலேயே 'சுந்தரமூர்த்தி (ஆலால சுந்தரர்)' என அழைத்ததன் நுட்பம் யாதென அறிய இயலவில்லை. சேக்கிழாரும் தேவ உலகம் பற்றிய குறிப்பில் மட்டுமே இப்பெயரை ஆள்கின்றார். ஆரூரராம் திருநாவலூராளியும் இன்று கிடைக்கும் நூறு திருப்பதிகங்களில் ஒன்றில் கூட, தம்மைச் சுந்தரர் எனக் குறித்திலர்.

**நம்பி ஆரூரர் காலப் பின்னணி**

எந்த ஒரு இலக்கியம் பண்பாடு நாகரிகம் சமயம் பற்றிய வரலாறும், அவ்வக் காலப் பின்னணியாம் அரசியல், சமுதாயச் சூழல்களாலேயே பாதிக்கப்படுகிறது. அவற்றின் செல்வாக்கால் நிகழும் திருப்பங்கள், மாற்றங்கள், எழுச்சிகள், வீழ்ச்சிகள் தவிர்க்க இயலாதவை.

தமிழர் வரலாற்றில் மூவேந்தரும் குறுநில மன்னரும் உட்பகைகளால் வலுவிழந்து, முதன் முதல் வேற்றரசுகள் புகுந்து ஆளத் தொடங்கி, உச்சிக்கு ஏறிய காலம் கி.பி.300 முதல் 900 வரை ஆகும். களப்பிரரும் பல்லவரும் ஆண்ட இக்காலத்தில், முன்பகுதி முழுவதும் புத்த, சமணம் பரவின; வேற்றுமொழிகள் சமஸ்கிருதம், பாலி, அர்த்தமாகதி, கிரந்தம் எனப் பல்வேறு உருவில் நுழைந்தன.

சங்ககாலத்திலேயே புத்த, சமண சமயம் இங்கு அங்கங்கு பரவியிருந்ததுண்டு.

வடமொழியாளரும் வடமொழியும் இங்கு புகுந்திருந்ததுண்டு. ஆனால் தமிழ் தலைமை ஏற்றிருந்தது.

## சமஸ்கிருத மோகம்

ஆனால் இக்களப்பிரர் காலம் பல்லவர் காலம் இரண்டிலும் அவை மேலோங்கி, ஆட்சிபீடத்திலமர்ந்து, தலைமை ஏற்றுக் கோலோச்சின. ஆள்வோரால் தமிழ் புறக்கணிக்கப்பட்டது.

தமிழர்கள் வடமொழி கற்பதற்கெனக் கிரந்த எழுத்துக்கள் தோற்றுவிக்கப்பட்டன. காஞ்சிபுரம் வடமொழி கற்பிக்கும் பல்கலைக் கழகமாகியது. வடமொழி கற்றோரே தலைமையும் மேன்மையும் பெற்றனர். இதனால் தமிழ்ப் பழங்குடிகளாகிய இசை, கூத்து வல்ல பாணர், பொருநர், கூத்தர் பலரும் வாழ்விழந்தனர். வாழ விரும்பியோர் வடமொழி கற்றுத் தாமும் பார்ப்பனர் என மாறினர். தமிழ்ப் பழங்குடிகளாகிய ஆசான்மார், கணியர், அந்தணர், மெய்த்துறவியர், குருக்கள், பட்டர், ஆதி சைவர் அனைவரும் 'கட்சி மாறியோர்' போல, வடமொழி கற்றுப் பார்ப்பனருடன் கலப்புற்று வாழ்வு தேடினர். இக்காலத்தில் தமிழ் மூல நூல்கள் வடமொழிமயமாக்கப்பட்டு, தமிழ் நூல்கள் அழிக்கப்பட்டன. தமிழ்ப் பெயர்கள், தமிழ்க் கலைச் சொற்கள் யாவும் சமற்கிருதமயமாக்கப்பட்டு, முன்னையவை மறக்கடிக்கப்பட்டன. சிற்பம், நாட்டியம், இசை பற்றிய கலைச் சொற்களும் தமிழர் சமயமாம் சிவநெறி திருமால் நெறி பற்றிய கலைச் சொற்களும் ஆகிய அனைத்துத் தமிழ்ச் சொற்களையும் மறைத்து, ஒழித்துவிட்டு, அவற்றைச் சமஸ்கிருதமாக மாற்றியதால் தமிழில் எதுவும் இல்லை என எண்ணும் நிலை ஏற்பட்டு விட்டது. இன்றைய ஆங்கில மோகத்தினும் மேலாக, சமஸ்கிருத மோகம் ஆறு நூற்றாண்டுகள், மேலோங்கியதால் தமிழ் தாங்குவாரின்றித் தத்தளித்தது.

## எழுச்சியிலும் ஒரு வீழ்ச்சி

பின்னர் ஏற்பட்ட சோழர் எழுச்சிக் காலத்திலும் சமஸ்கிருத மோகத்தை மாற்ற முடியாத அளவு, முன்னைய ஆட்சிக் கால நிகழ்வுகள் தமிழைப் புறக்கணித்துவிட்டன. இச்சூழலை வேத வைதிக சமயவாதிகள் நன்கு பயன்படுத்திக் கொண்டனர்.

இக்கால கட்டங்களில் புத்தமதம், ஆட்சியாளர் சமயமாகாத காரணத்தாற்போலும், அத்துணை வேகங்கொண்டு பரவவில்லை. அன்று சமணம் ஆள்பவர் சமயமாய், முதலில் பிறமொழி ஆதிக்கத்திற்கு வித்திட்டது. 'மணிப் பிரவாளம்' எனச் சமற்கிருதத்தைச் சரிக்குச்சரி கலந்த, ஒரு தமிழ்நடையை உருவாக்கியதும், கிரந்தம் மூலம் சமஸ்கிருதத்தைத் தென்னாட்டில் வேரூன்ற வகை செய்ததும் சமணமேயாம்.

தென்னாட்டில் தமிழையும் தமிழர் பண்பாட்டு அடையாளங் களையும் அத்துணை எளிதில் அழிக்க முடியாதென உணர்ந்த சமணம், புத்தம், வைதிகம் மூன்றும் தமிழ் மொழிக்கும் இலக்கிய இலக்கணங்களுக்கும் தாம் பணி செய்து, மாறவேண்டிய 'கட்டாயம்' ஏற்பட்டது. இவைகளுக்கு ஆள்பவர் துணையிருந்தாலும் புலவரும் மக்களும் தங்கள் உரிமைகளைக் காப்பதில் கருத்தாக இருந்தனர். இது ஒரு நுட்பமான வரலாறு. முன்னர் வேகங்கொண்டு பரவ முற்பட்ட இவை, பின்னர் இங்கு நிலை கொள்ள முடியாது எனத் தெரிந்ததும் தமிழ்ப்பணி செய்ய மாற நேரிட்டது. அதன் பின் வைதிகம், தமிழர் சமயங்களுடன் கூட்டணி வைத்துக் கொண்டது.

## இருவகை வேதியருடன் ஒரு கூட்டணி

தமிழக நிலவழி வழிபாடுகளாக வேரூன்றி வளர்ந்த சிவனியம் (குறிஞ்சி), மாலியம் (முல்லை), கொற்றவையியம் (சக்தி வழிபாடு) ஆகிய மூன்றையும் வைதிக வேத மதம் பற்றிக் கொண்டு, தன்னை உருமாற்றிக் கொண்டு மக்களை நம்பி ஏற்கவைத்து, ஏனைய புத்த, சமணங்களைத் துரத்தியடித்தது. இதற்குத் தமிழ் மொழி பயன்பட்டது. தொன்மைமிக்க காலத்திலிருந்தே, வேள்வியே வழிபாடாகவும், எரியோம்பலே வாழ்வாகவும், வருணாசிரமமே நெறியாகவும், அத்துவைதத் தத்துவமே அடிப்படையாகவும் கொண்டிருந்த வேத நெறிக்குள்ளேயே சிவனியமும் தமிழர் கோட்பாடுகளும் ஏற்கப்பட்டு, அவை இருபிரிவாயின, வேத வைதிகம் வேறு; சிவ வைதிகம் வேறு என்றாயின. வேத வைதியர், சிவ வேதியரினின்றும் மிகவும் வேறுபட்டவர் ஆவர். எனினும் தமிழர்களே வடமொழி கற்று, சைவ வைதிகம்

அல்லது வைதிகச் சார்புடைய சைவம் எனப் போற்ற வேண்டிய சூழலிலேயே, தமிழகப் 'பக்தி இலக்கிய இயக்கம்' கி.பி. ஏழாம் நூற்றாண்டில் தோன்றியது.

வேத வைதிகத்தின் கருத்துக்களை ஏற்காவிடினும், அதனுடன் கூட்டுச் சேர்ந்து, சமணத்தை எதிர்க்க வேண்டியதானது. திருநாவுக்கரசர், மகேந்திரப் போத்தரையன் எனும் மாபெரும் வேந்தனையே எதிர்த்துநின்று, தமிழையும் தமிழர் சமயத்தையும் காக்க வேண்டிய நிலையில் அவருக்கு வேத. வைதிகர், அந்தணர், ஆதி சைவர் அனைவரின் துணை தேவைப்பட்டது. சமண ஆதிக்கம் பெருகிய நிலையில் மறை ஞான சம்பந்தர், 'தமிழ் ஞான சம்பந்தராகி' நாளும் இன்னிசையால் தமிழ்பரப்பி, சிவனியத்தை நிலை நிறுத்த வேண்டியதாயிற்று. இன்றேல் சமணம் வைதிகத்தை விழுங்கியிருக்கும்.

**பக்தி ஒரு வாணிகமா? புண்ணியம் ஒரு வியாபாரமா?**

அந்தணர்கள் பரம்பரை அறிவுடையவர்களாயினர்; அறிவுடைத் தமிழர்களும் கலைத்துறைத் தமிழர்களும் பூணூல் அணிந்து, தாமும் அந்தணரே என வாழ வழி தேடினர். இவர்கள் எல்லோரும் தமிழையும் தமிழ்ப் பண்பாட்டையும் மக்களிடையே எழுச்சி தருமாறு கூறிப் பாடி, சமணத்தை விரட்டியபின், தாமே தமிழுக்கு 'எதிராக' மாறி, அதே சமற்கிருதத்தை இங்கே பரப்பி, அதன் வழி வருமானம் தேடி வாழ முற்பட்டனர். அன்று முதல் இன்று வரை இவர்கள் எந்தத் தமிழ்மொழி, தங்களைக் காத்ததோ, அந்தத் தமிழையும் தமிழனையும் இறைவனது கருவறையுள் நுழைய விடாமலும் தம் பக்தியை நேரிடை அனுபவமாக்க விடாமலும், இடைத்தரகர்களாக இருந்து பிறப்பு, திருமணம் முதல் சாவு வரை அனைத்துச் சடங்குகளையும் வடமொழி வேத மந்திரங்கள் மூலம் தாமே செய்வதாகக் கூறி, நன்றியின்றி வாழ்கின்றனர். பொதுமக்களின் பக்தி, இவர்களுக்கு முதலீடில்லாத வாணிகமாயிற்று. இன்று தமிழரின் பக்தியை, மூடநம்பிக்கையின் கொள்கலம் ஆக்கிவிட்டனர்.

இவ்வகை வைதிக அந்தணர் பற்றி, பரிதிமாற் கலைஞர் கூறுவது காண்க : "வடமொழியாளர் தமிழர்களது ஒழுக்க வழக்கங்களையுணர்ந்து

அவற்றிற்கேற்ப வடமொழியில் நூல்கள் வகுப்பான் புகுந்தனர்." "வேதங்களில் 'கோயில்' எனும் சொல்லே காணப்படுவதன்று. அவர்களுக்கு அக்கினி வழிபாடு தவிர உருவ வழிபாடு கிடையாது. இதனால் ஆகமங்கள் பற்றி, வடநாட்டவர், அண்மைக் காலம் வரை இம்மியளவும் அறியார். அவை நாகரி எழுத்தில் எழுதப்படாமல் கிரந்தத்தில் எழுதப்பட்டுள்ளதே, அவை தமிழரிடமிருந்து பெறப்பட்டவை என்பதை உணர்த்தும்". மேலும் பரிதிமாற் கலைஞர் கூறுவன காண்க. "இன்னும் அவர் தம் புந்திநலங் காட்டித் தமிழரசர்களிடம் அமைச்சர்களெனவும் மேலதிகாரப் பிரபுக்களெனவும் அமைந்து கொண்டனர்; தமிழரிடத்திலிருந்த பல அரிய விஷயங்களையும் மொழிபெயர்த்துத் தமிழர் அறியுமுன்னரே, அவற்றைத் தாமறிந்தன போலவும், வடமொழியினின்றுமே தமிழிற்கு அவை வந்தன போலவும் காட்டினர்" (தமிழ் மொழி வரலாறு).

சிவனியத்தில் 'வினைக் கோட்பாடு' மிகத் துல்லியமான அறிவியலாகும். 'வினைப் பகை வீயாது பின்சென்று அடும்'. ஆனால் வைதிகர், மக்களிடம் அவர்களது தீவினைப் பயன், கிரக தோசம் முதலியவற்றுக்கு, நூற்றுக்கணக்கான பரிகார விதிகளை வகுத்து, மக்களை நம்ப வைத்துப் 'புண்ணிய வியாபாரமும்' செய்து பிழைக்கலாயினர். இதைப் பற்றி, பொ.சங்கரப்பிள்ளை மிக விரிவாக எழுதியுள்ளார். "இறைவனை வணங்கினால் அவன் பாவங்களை மன்னித்து விடுவான் எனச் சிலர் எண்ணுகின்றனர். மன்னிப்புக் கேட்டுவிட்டு அதே பாவங்களைத் திரும்பத் திரும்பச் செய்கிறார்கள்... பூசாரிகளுக்கும் கோவில்களுக்கும் காசு கொடுத்து புண்ணியத்தை வாங்கலாம் எனச் சிலர் எண்ணுகிறார்கள். சிலர் பாவ மன்னிப்புக் கொடுப்பதற்கு இவ்வுலகில் தம்மைத் தாமே இறைவனின் பிரதிநிதிகளாக நியமித்து விட்டனர்". (சைவ சித்தாந்தம்)

## பெரிய புராணமும் தமிழர் சமய நெறியும்

இங்ஙனம் அரசர் முதல் ஆண்டிவரை, தம்பால் ஈர்த்த வைதிகத்தைத் தழுவியே, தமிழகச் சமயங்கள் வாழ நேர்ந்தன. இச்சூழலில், வெறும் நா அசைவினால் வேத நெறியைப் போற்றுவது போல் போற்றிக் கொண்டு, தமிழகச் சமய நெறிகளையும் தமிழையும் நிலை நாட்டிய

பெருமை வியப்பிற்குரியதே. வேத வழிக் கோட்பாடு எதனையாவது ஏற்றதாக, திருமுறைகளிலிருந்து ஒருவரி காட்ட முடியுமா?

1. பெரிய புராணத்தில் வரும் நாயன்மார் எவரும் வேள்வி செய்து, சிவனை அடைந்ததாகக் கூறாததை எண்ணிக் பார்க்க வேண்டும். சோமாசி மாற நாயனார் சிவவேள்வி செய்ததாக ஒரே ஒரு பாடலில் வருவது ஒன்றே விதிவிலக்காக உளது. ஆனாலும் அவர் சிவப்பணி செய்தே சிறப்புற்றார் என்று தான் குறிக்கப்படுகிறது.

2. சுந்தரர் 'தில்லை வாழ் அந்தணர்' என்று இறைவனால் அடியெடுத்துத் தரப் பெற்றுத் தொடங்கியது. அக்காலச் சூழலை வெல்லவேயாம். நுளையர், இடையர், வணிகர், வேளாளர், வேடர், செக்கார், ஆதி சைவர், அந்தணர், ஏகாலியர், புலையர், குயவர் என இவ்வாறு குல வேறுபாடின்றிச் சுந்தரர், 'வருணாசிரம வழி'க்குப் புறம்பாக, அனைத்து அடியார்களுக்கும் தாம் அடியவராகிப் பாடுவது, வேத நெறியன்று, சிவனியத்தைக் காக்க வேண்டிய திருமட அதிபதிகளுக்கும் சிவனடியார்களுக்கும் இதுவிளங்காமற் போனது ஏன்? பி.டி.சீனிவாச அய்யங்காருக்கு விளங்கிய இது, தமக்கு விளங்காமல், தாமும் விளங்காமல் போனது ஏன்? (History of Tamils)

3. "யக்ஞங்களைச் செய்வதே வேதத்தின் தலையாய நோக்கம். பரஞானம் பெறுவது வேதத்தின் மற்றொரு நோக்கம் என்றும் கூறுவர். வேதம் செய்யப் பெற்ற காலத்தில் முதல் நோக்கமே (யக்ஞம்) மேலோங்கி இருந்தது. பிறகு வேதக்காரர்கள் தமிழ் மக்களோடு தொடர்புகொண்ட காலத்தில், ஞானம் என்ற பொருள் அவர்களுக்குத் தெரியவந்தது. அதன் விளைவே பின்னர் எழுந்த உபநிடதங்கள் (பிள்ளையார்பட்டி, வேதாகம வித்தியாலய மலர்)

4. வேதங்களின் படி 'உருவ வழிபாடு', 'கோயில் வழிபாடு' இல்லை. அக்கினி, இந்தீரன், பிரஜாபதி, வருணன், வாயு, சூரியன் என வரும் இவ்வாறான தேவர்களின் பட்டியலில் சிவன் இல்லை.

இத்தேவர்களும் தேவதைகளும் மேலுலகத்தில் இருக்கிறார்கள். அக்கினிதேவன் மூலம் வேள்வி செய்து, மக்களுக்குப் பயன்படும் அனைத்துப் பொருள்களையும் (பசு, மாடு, ஆடு, ஆடை உட்பட), மேல் உலகிற்கு அனுப்பி, அவர்களைத் திருப்திப்படுத்த வேண்டும். அதனால் மட்டுமே இவ்வுலகிற்கு மழை, உணவு எல்லாம் தந்து, அத்தேவர்கள் அருள் பாலிக்கிறார்கள். இது தமிழர் பண்பாட்டுக்கு முற்றிலும் மாறுபட்டது. படையல் இடுவதே தமிழர் பண்பாடு என்பதை பி.டி.சீனிவாச ஐயங்கார் மிகத் தெளிவாக விளக்கியுள்ளார். (History of Tamils) மேலும், அவர் அக்கினி வழிபாட்டில், மக்களுக்குப் பயன்படும் அனைத்தையும் நெருப்பில் போட்டு அழிக்கின்றமையை அறவே நீக்குதல் வேண்டும் என்பதைக் குறிப்பாக உணர்த்துகிறார்.

## தமிழில் வேதம் பகர்ந்த ஆலமர் செல்வன்

தமிழர்களுக்கென தென்முகக் கடவுளாம் ஆலமர் செல்வன் அருளிய வேதம், ஆரிய வேதத்தின் வேறுபட்டதென அறிய முடிகிறது. இது சிவனருளிய அறம் எனப்படும். "வெந்த நீறுமெய் பூசவல்லானை. வேத மால்விடை ஏறவல்லானை" என்பார் ஆரூரர்(பதி.57). வேதம் சிவனால் கட்டுப்படுத்தப்பட்டது என்ற உண்மையை, இஃது உணர்த்துவதாகலாம். இறைவன் அந்தணன் எனவும் முப்புரி நூலினன் எனவும் குறிக்கப்படுதல், அற்றைச் சூழலில், 'மேலானவன்' என்பதை உணர்த்தவேயாம்.

'மறை நான்கும் கல்லால் நிழற்கீழ்ப்
பன்னிய எங்கள் பிரான்' (சுந்தரர், பதி. 22)

'அன்று ஆலின் நிழற்கீழ் அறம் நால்வர்க்கு அருள்புரிந்து' (பதி.28) 'அந்தணர்க்குப் பொழில்கொள் ஆல் நிழற்கீழ் அறம் புரிந்து' (பதி.55). 'ருத்ரன்' என்று மட்டும் குறிக்கும் வடமொழி வேதங்கள், சிவனை வழிபடவோ, சிவனை அழைத்து வேள்வி செய்யவோ இல்லை. இத்தென்முகக் கடவுளை 'ஆலமர் செல்வன்' (கலி.81), 'ஆலமர் செல்வற்கு (சிறுபாண் 97), 'ஆல்கெழு கடவுள்' (முருகு.256) எனச் சங்கப் பாடல்களில் பல இடத்தும் காணலாம். இவை வடவர் அறியாதன; வடமொழி நூல்கள் குறியாதன.

மாணிக்கவாசகர் 'தென்னாடுடைய சிவனே போற்றி' என்று முத்திரை பதித்தார். சிவனைத் தென்னன், தென்பாண்டி நாட்டான் என்று திரும்பத் திரும்பப் பாடுகிறார். சுந்தரும் தென்னானை, குடபாலின் வடபாலின் குணபாற் சேராத சிந்தையான்' என்று, வேறு திசைகளுக்கு உரியவனல்லன் என இதை மேலும் விளக்கமாகக் கூறுகிறார் (பதி.38)

## தக்கன் வேள்வி உணர்த்தும் உண்மை

தக்கன் தான் செய்த வேள்விக்கு பிரமன், விஷ்ணு முதலான அனைத்துத் தேவர்களையும் அழைத்து, முழுமுதற் கடவுளாகிய சிவனை அழைத்திலன். இதனால் சிவனார் அவ்வேள்வியை அழித்து, தக்கனையும் தண்டித்தார். இத்தொன்மம் சிவனை விட்டு விட்டு, ஏனைய தேவர்களுக்கு வேள்வி செய்தலே முதலில் மேலோங்கியிருந்ததையும், பின்னாளில் தமிழ்ச் சிவ வேள்வியர் சிவனையே முதன்மைப்படுத்தி வேள்விகள் செய்ததையும் இதனாலேற்பட்ட மோதல்களையும் குறிப்பதாகும். சுந்தரர் ஒன்பது இடங்களில் இதைக் குறிப்பிடுகிறார்.

'பழிக்கும் பெருந்தக்கன் எச்சம் (யக்ஞம்) அழியப்
பகலோன் முதலாப் பல தேவரையும்
தெழித்திட்டு அவரங்கம் சிதைத்தருளும்
செய்கை என்னை கொலோ' (பதி.9)

'வென்றவன் வென்றவன் வேள்வியில் விண்ணவர்தங்களை (45)
தக்கன்தன் வேள்விபுக்கு அன்று இமையோரை இரித்தநம்பி (63)
கருதாதவர் வேள்வி அவி உண்ணற்கு இமையவரை
உருண்டோட உதைத்துகந்து நண்ணற்குஅரிய பிரான்' (8213)

இவ்வாறு, மிகச் சீற்றம் பொங்கச் செண்டாடிய வரலாறாக இது, சுந்தரப் பாடல்களில் முழங்குகிறது.

இவற்றால் வேத வேதியரும் தமிழகத்தில் புகுந்து, பல்லவர் காலத்தே மிகு செல்வாக்குடன், அரச ஆதரவுடன், பிறரை அடிமைப்படுத்தி ஆட்டிப்

படைக்குமளவு இருந்தனர் என்பதையும் நாம் திருமுறைகள் வழி அறிகிறோம். அவர்களும் சுதந்திரமாக இங்கு வாழ்ந்ததோடன்றி, அவர்களைப் பழித்தாலோ, இழித்தாலோ சைவத்திற்கும் சிவ வேதியர்க்கும் ஆதி சைவர்க்கும் சிவனடியார்கட்கும் வாழ்வில்லை என்னுமளவு, அரச பீடத்திலிருந்து கோலோச்சினர் எனவும் உணர முடிகிறது. 'நீதியினின்றும் வழுவேன், நிட்கண்டகம் செய்து வாழ்வேன்' எனத் தொடங்கிய சுந்தரர், 'வேதியர் தம்மை வெகுளேன், வெகுண்டவர்க்குத் துணை போகேன்' என்று உறுதி கூறித் தம் ஆதியை, ஆரூர்ச் சிவனைத் துதிக்க வேண்டியிருந்தது (73). அப்பர் பெருமான் 'ஆரியன் கண்டாய், தமிழன் கண்டாய்' எனப் பாட நேர்ந்தது. இவை மிகமிக அருகிலே காணப்படும். இன்றும் கொள்கை யில்லாக் கூட்டணியினர், ஒருவரை ஒருவர், சிறப்பித்து வெளியே பேசுவதில்லையா?

## பொடிபூசி வேள்வி செய்த புதுமை

பல்லவர் காலத்தில் சமஸ்கிருதமே ஆட்சி மொழி, சமய மொழி, கலைமொழி என மேலாண்மை செய்தது. இதனால் தமிழர்தம் கலைகளும் சமயங்களும் பிறவும் யாவும் வடமொழியாக்கம் பெறவும், வடமொழியிலேயே எழுதப்படவும் நேர்ந்தன. 'எங்கும் வடமொழி, எதிலும் வடமொழி' என்ற காலத்தில், திருநாவுக்கரசர், ஒருவிடுதலைப் போராட்ட வீரராகத்திகழ்ந்தார். மறைஞானசம்பந்தர், தமிழ் ஞான சம்பந்தரானது அன்று பெரும் புரட்சியாகப் போற்றப்பட்டது. பல்லவர் போற்றிய சமணம் முறியடிக்கப்பட்டு, அம்மாமன்னர்கள் சிவனிய மாலிய வழிக்குத்திரும்ப நேர்ந்தது. எனினும் ஆங்கிலேயன் போய் அரைநூற்றாண்டான பிறகும், ஆங்கில மோகம் தமிழரை ஆட்டிப் படைப்பது போலச் சமஸ்கிருதமும், வேத வைதிகமும் தமிழரை ஆட்டிப் படைத்தன. இந்நிலையில் சிவ வேதியர் தமது உரிமை போற்றுதற்காக, அவ்வடவர்க்குச் சமமாகச் 'சிவ வேள்விகள்' செய்தனர்.

'பொய்யாத வாய்மையாற் பொடிபூசிப்
போற்றிசைத்துப் பூசை செய்து

கையினால் எரியோம்பி மறைவளர்க்கும்
அந்தணர்தம் கருப்பறியலூர்' (30)

இப்பாடலில் பொடி பூசிய அந்தணர் போற்றியும் பாடி 'எரியும் ஓம்பி' வழிபட்டமை கூறப்படுகிறது. 'வேதம் ஓதி வெண்ணீறு பூசி' (49) என்றும் கூறுகிறார். இத்தகைய பல பாடல்களை நுட்பமாய் ஆராயாமல், சிவாச்சாரியார்களைக் கூட்டிவைத்துத் தாமும் உணர்விழந்து, அவர்களையும் உணர்விழக்கச் செய்வன பலவாகும். உண்மைத் தமிழர்கள் இதைக் கண்டு கண்ணீர் உகுப்பதா, கடிந்துரைப்பதா என விளங்கவில்லை.

சுருங்கச் சொன்னால் பல்லவர் காலமாகிய பக்தி இயக்கக் காலத்தே, தமிழ், வடமொழி வேதம் என, இருவகை வேதங்கள் இருந்தன; தமிழர்தம் வேதங்கள் சிவனருளியவை. இருவகை வேதியர் இருந்தனர். வேத வைதிக வேதியர் கை ஓங்கியிருந்தாலும் சிவவேதியர், அவர்களை மறுக்காமலும் எதிர்க்காமலும் மிகச் சாதுரியமாகத் தங்கள் சமயத்தையும் தமிழையும் காப்பாற்றினர். நம் அருளாளர்கள் வடமொழி வேதம், வேள்விகளைப் பாராட்டும் சுமார் இருநூறு இடங்களிலும், அக்கொள்கைகளைப் பற்றி ஒருவரி குறித்திலர். அவற்றில் ஒரு கொள்கையைக் கூட விளக்கிலர்; ஏற்றிலர். மறைமுகமாக அவற்றை மறுத்தனர் என்பார் அ.ச.ஞா. (பெரிய புராண ஆராய்ச்சி). வெறுமனே வாயளவில் போற்றினர் என்பார் அறிஞர் மு.அருணாசலம். அக்கொலை வேள்விகளையும் பிற வருணாசிரம, பரிகார, பக்தி வாணிகக் கோட்பாடுகளையும் ஏற்றோ, விளக்கியோ பாடிற்றிலர். பிறர் செய்கின்றனர் எனப் பாடுவதற்கும், தாம் அவற்றை ஏற்று விளக்கிப் பாடுவதற்கும் வேறுபாடுண்டன்றோ?

**வேதம் பகர்ந்தவனா?**
**வேதங்கள் தேடியும் அறியப்படாதவனா?**

'அரிய நான்மறை அந்தணர் ஓவாது, அடிபணிந்து அறிதற்கரியானை' என்பதன் கருத்தும் சிந்திக்கத்தக்கது(67) அருமறைகளை ஓதியவன், அருளியவன் எனவும் அருமறைகள் தேடியும்

காணாதவன் எனவும் அடிமுடிகளைப் பிரமனும் விஷ்ணுவும் தேடி அறியமாட்டாத அண்ணா மலையான் எனவும் கூறுவன ஒன்றற்கொன்று 'வேறுபடுகின்றனவா'? முரண்படுகின்றனவா? - முழுமையாய் ஆராய வேண்டியவை இவை. சுருங்கச் சொன்னால் வடமொழி வேதங்கள் தேடியும் அறியாதவன்; தமிழ் வேதங்களை அருளியவன்.

வேள்விகளை மூவேந்தர் காலம் முதல் தமிழர் நம்பியிருந்தமை வரலாறு. எனவே தக்கன் வேள்வி போல்பவை முன்னையவை; அவை போலச் செய்து மக்களை ஈர்க்க வேண்டி நடந்தவை சிவ வேள்விகள். நம் அருளாளர்கள் பெரிதும் போற்றியது தமிழ்ச்சிவநெறி போற்றிய வேதங்களையும் வேள்விகளையுமேயாம். சிவனைத் தவிர்த்துச் செய்த வடவரின் வேதவழி வேள்விகளை, வெறுமனே கூறிவிடுத்தனர். இந்நுட்பங்களை பி.டி.சீனிவாச அய்யங்கார், மு.அருணாசலம், பரிதிமாற்கலைஞர், அ.ச.ஞானசம்பந்தன், வெ.ப.சுப்பிரமணிய முதலியார், ந.சி.கந்தையா பிள்ளை, பொ.சங்கரப்பிள்ளை, எஸ்.கே.பாண்டியன், மொழி ஞாயிறு பாவாணர் போலும் பேரறிஞர் தம் நூல்களைப் படித்தறியலாம்.

வேத வேதியரே நிரம்பி வழிந்த ஊர் சேய்ஞலூர் அவர்கள் செய்த வேள்வியில், 'யாகம் நிலவும் சாலை தொறும் மறையோர் ஈந்த, அவியுணவின், பாகம் நுகர வரும் மாலும் அயனும்' எனச் சேக்கிழார் கூறி, அவர்கள் சிவனை விடுத்ததை, தாமும் கூறாது விடுத்து, நம்மை உணராது உணரவைக்கின்றார். திருமுறைகளில் தோய்ந்த அறிவுடையார்க்கன்றி இவை விளங்கா. எச்சதத்தன் (யக்ஞ தத்தன்) மகனாகிய விசார தருமனார், பசுக்களைப் போற்றி, ஆற்றருகே மணலில் சிவலிங்க வழிபாடு செய்ததை, அவ்வூர் மறையவர் பொறுத்திலர். இதனால் அதற்கு ஊறு விளைத்த, தந்தையின் கால்களையே வெட்டி எறிந்தார், சண்டேசுரர் எனப் போற்றப்படும விசார சருமர். இவர் வேத வேள்வியர் குலத்தில் பிறந்து சிவ வேதியரானவர். அந்நாளில் திருஞான சம்பந்தரும் இத்தகையவரே. இன்றைய அரசியல் கட்சிகளில் பூசல்களும் அணி மாறுதல்களும் நட்பும் பகையும் மாறிமாறி நிகழ்தலும் போன்ற, பலவகையான மாற்றங்கள் சமயவுலகில் நிகழ்ந்துள. இதனை அறியாது, 'நாளும் இன்னிசையால்' தமிழ் பரப்பி, அம்மொழிவழி

வழிபாட்டையே பாடிப்பரவ வந்த திருமுறைகளுள் உள்ள மறைபொருள் உண்மைகளை இனியேனும் உணர்வோமாக.

**நம்பி ஆரூரர் - ஒரு வரலாற்றறிஞர்**

ஆரூரர் ஒரு வரலாற்றாசிரியர். அவர் பதிகங்களில் காணப்படுவன.

1. தன் வரலாற்றுக் குறிப்புகள்
2. ஏயர்கோன், சண்டீசர், நாவரசர், சம்பந்தர், கோட்புலியார், புகழ்ச் சோழர், அழகிய தமிழ்ப் பெயருடைய தம் பெற்றோராகிய சடையனார், இசை ஞானியார் தம் வரலாற்றுக் குறிப்புக்கள்.
3. தம் பிறவியின் குறிக்கோளாகவே, மாதவம் செய்த தென்திசை வாழ்ந்திடத் திருத்தொண்டத் தொகை தந்தமை
4. திருநாட்டுத் தொகை (பதி.12)
5. திரு இடையாற்றுத் தொகை

எனத் தலங்களையும் தொகுத்துப் பாடியமை என இவ்வாறு பலவற்றைக் குறிப்பிடலாம். இவை தனி ஆய்வுக்குரியவை.

தடுத்தாட்கொண்ட புராணம் - என்பதே, உலக உயிர்களை, இறைவன் தடுத்தாட்கொள்வது பற்றியதே. (பதி.90) ஆரூரர் சுமார் பத்து இடங்களில் மட்டுமே சமணர், சாக்கியரை எதிர்த்துப் பாடியுள்ளமை, அவர் காலத்தில் அச்சமயங்கள் வலுவிழந்து போயின என்பதையே உணர்த்தும். நாவரசர் முதல் சுந்தரர் வரை, வேத வைதிகருடனான மறைமுகப் போரே - பனிப்போரே மேலோங்கி இருந்துளது.

'தென்திசை வந்த நாவலர் கோனை' - வடதிசை முனிவர் கண்டு வியக்கின்றனர். 'மாதவம் செய்த தென்திசை வாழ்ந்திட', 'தேசம் எலாம் விளக்கிய தென்திசை' எனப் பாடுகிறார் சேக்கிழார். அவரே வேதநெறி

தழைத்தோங்க, மிகுசைவத் துறை விளங்க', 'சைவ முதல் வைதிகமும் தழைத்தோங்க', 'வண்டமிழ் செய்தவம் நிரம்ப', 'திசையனைத்தின் பெருமையெலாம் தென்திசையே வென்றேற', 'அசைவில் செழுந்தமிழ் வழக்கே அயல் வழக்கின் துறைவெல்ல', 'திருமறையும் தீந்தமிழும் சிறக்க' என இவ்வாறும் பாடுகிறார். இவை ஒரு பகுதி, சிவனருளிய, சிவனைப் போற்றிய திருமறைகள் எல்லாம் பிற வேத வைதிகத்தையும் குறிக்குமாறுள்ளது, 'கொள்கையில்லாக் கூட்டணி போல, வரலாற்றில் நிகழ்ந்த விபத்துக்களால், வாயளவில் பாடி, தற்காப்புத் தேடியவையேயாம். சேக்கிழார் பெருமான் "நமக்கும் அன்பிற் பெருகிய சிறப்பின்மிக்க, அர்ச்சனை பாட்டேயாகும், ஆதலால் மண் மேல் நம்மைச் சொற்றமிழ் பாடுக" என்று இறைவனே, தூய தமிழ்மறை பாடிய தமிழரின் ஆலமர் செல்வனே கூறியதாகச் சொல்லியமை அழுத்தமான 'செய்தி'யாகும். திருத்தொண்டத் தொகை தந்த நம்பியாரூரர் வாழ்வில், 'தமிழில் பாடி வழிபடுதலே அருச்சனை' என்ற இச்செய்தி முடிமணியாகும். தேவாரமும் திருவாசகமும் பாடி, அவரவர் தாம்தாம் நேரே பாடிப் பரவுதலே உண்மைவழிபாடாகும். 'சலம்பூவொடு மறந்தறியேன்' 'பூவும் நீரும் கொண்டு' 'போதொடு நீர் சுமந்து ஏத்தி புகுவார் அவர்பின் புகுவேன்', 'நீரும் பூவும்'(ஆரூரர் பதி.6). 'நறுமணப் பூவும் நீரும் (8) - இவ்வாறு வருவன மிகப் பல. இவற்றை ஓதியுணர்ந்து, அதன் வழி நடப்பதே நாம் திருக்கோயில் வழிபாட்டில் செய்யத்தக்க நல்ல சீர்திருத்தமாகும். இடைத் தரகரின்றி, அவரவர் தாம் தாம் பாடி, நீரிட்டு மலர்தூவி வழிபடுதலே தமிழர்தம் வழிபாட்டு நெறி என்பதை, நம் திருமுறைகளிலிருந்து, ஆயிரம் சான்றுகள் காட்டி நிறுவலாம்.

# இருவகை மரபுகள்

வடமொழி மரபும் செந்தமிழ் மரபும் வேறுபட்டவை மட்டுமன்று, முரண்பட்டவை. வடவர் அக்கினியைப் போற்றுவர், திருள்ளுவர் வான் சிறப்பு என்று மழையைப் போற்றுகிறார். ஆனால் சமணரின் தாக்குதலால் அச்சம் குடி கொண்ட வைதிகர், தமிழர் சமயங்களுடன் ஒரு கொள்கையில்லாக் கூட்டணி வைக்க நேர்ந்தது. தமிழர்க்கும் அன்றைய சூழலில், தமக்கு இணங்குவார் போல் நடித்த வைதிகர்களுடன், உள்ளீடில்லாத ஒற்றுமை கொள்ள நேர்ந்தது.

தமிழர்க்கும் நான்மறை, வடவர்க்கும் நான்மறை என்பதால் குழப்பம் ஏற்பட்டது. பல இடங்களில் இவற்றிடை வேறுபாடறிய முடிகிறது; சில இடங்களில் வேறுபாடு துல்லியமாகத் தெரியவில்லை.

தமிழர்க்கு 'மறை' என்பதே பெரு வழக்குச் சொல்லாகும்.

தொல்காப்பியர்,

'நிறை மொழி மாந்தர் ஆணையிற் கிளந்த
மறைமொழி தானே மந்திரம்' என்ப

என்றார். திருவள்ளுவர்,

நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும்.

என்றார். சிவன் அருளிய மறைகளை தமிழ் முனிவர்களும் தெய்வநிலைச் சான்றோர்களும் உலக மக்களுக்கு விளக்கியுரைத்தனர். நிறைமொழி மாந்தர் - பொருள் பொதிந்த மொழியினர்; பயனை விளைவிக்கும் ஆற்றலுடைய மொழியினருமாம். வடவர் கூற்றுகளுக்கு மறுதலையாக,

“நீங்கள் சொல்வது போன்றதன்று மந்திரம்; அவை மக்களை வாழ்விக்கும் ஆற்றல் மிக்கவை” என்று கூறியமை கருதற்பாலது. திருமூலரின் நூல் ‘திருமந்திரம்’ என்று கூறப்படுவதும் இதை வலியுறுத்தும். புறநானூற்றில் ‘அறம் பாடிற்றே ஆயிழை கணவ’ என்னுமிடத்தில் திருக்குறள் அறம் எனப்பட்டதும், தமிழ் நூல்கள் பிறவற்றிலும் ‘அன்றாலின் கீழிருந்து அறமுரைத்தான் காணேடீ’ என்று கூறப்படுவதும் கருதத்தக்கது.

வடமொழி நூல்கள் எதைச் செய்தும் எப்படி நடந்தும் வாழ வழிகாட்டுவன போலத் தோன்றுகின்றன. தமிழ் நூல்கள் அறவழி ஒன்றையே அறுதியிட்டுக் கூறுகின்றன.

உதாரணத்திற்குக் கழுவாய் என்ற பிராயச் சித்தக் கோட்பாட்டைக் காட்டலாம்.

**பிராயச் சித்தம்**

தமிழ் இலக்கிய இலக்கணங்களைப் படிப்பவர்கள் மேலோட்டமாகப் படிப்பதோடு நின்று விடுகின்றனர். நயங்காண்பதே பெரிதும் உளது. அமெரிக்க நாட்டிலிருந்து வந்த ஒப்பியலறிஞர் “நாங்கள் எங்கள் துறையில் ஐந்தாண்டுகளில் மேலும் முன்னேற்றம் கண்டு, வளர்ந்தபடி இருப்போம். நீங்கள் ஐந்தாண்டுகளுக்கு முன் நாங்கள் நின்ற இடத்திலேயே இன்றும் நிற்கிறீர்கள், இது வளர்ச்சி ஆகாது” என்றார்.

ஒரு நூலையே பயின்றாலும் ஒரு துறையிலேயே ஈடுபட்டாலும் மேலும் மேலும் உண்மையைத் தேடியபடி இருக்க வேண்டும். ஆழ்ந்திருக்கும் கவியுளம் காண வேண்டும். தேடுதல் மட்டுமன்று தோண்டுதல் வேண்டும் என்பார் திருவள்ளுவர். “தொட்டனைத்தூறும் அறிவு” என்று முயலுதல் வேண்டும். கலந்துரையாடல் வரும், விவாதம் சூடுபிடிக்கும்; கருத்து வேறுபாடு தோன்றும். அதற்காகப் பகைமை பாராட்டாமல் கருத்து மோதலில் மட்டும் நிற்க வேண்டும்.

தமிழர் சமய நுட்பங்கள் பல மறைக்கப்பட்டுள்ளன. தமிழர் சமயங்களுக்கும் வழிபாடுகளுக்கும் தமிழ்க் கலைச் சொற்களே கிடையாது. பிராதத்தம், ஆகாமியம், சஞ்சிதம்-இதைக் கேட்டதும் இது தமிழர் கண்ட சமயமன்று என்றுதான் தோன்றும்.

சேக்கிழார் நகரச்சிறப்பில் என்ன பாடவேண்டும். அதன் பெருமைகள், சிறப்புக்கள், இயற்கைப் புனைவுகள் என்றல்லவா பாடியிருக்க வேண்டும். அவற்றை விட்டுவிட்டு, மனுநீதிச் சோழன் கதையை ஏன் புனைகிறார்? இது வேண்டுமென்று புகுத்தியது போல் தோன்றுகிறது.

தேர்க்காலில் பசுங்கன்று அடிபட்டுச் செத்ததும் இளவரசன் திகைத்து வருந்துகிறான். அருகிலிருந்த அந்தணர்கள் "இதற்காக வருந்த வேண்டியதில்லை. பசுவைக் கொன்ற பாவம் நீங்கப் பரிகாரங்கள் உள. அவற்றைச் செய்தால் போதும்", என்று கூறுகிறார்கள். இளவரசனும் ஆறுதலடைகிறான்.

இதற்கிடையே பசு சென்று ஆராய்ச்சி மணியை அடித்து விடவே, மன்னன் செய்தியை அறிகின்றான். அளவிறந்து துன்பப்படுகிறான். அங்கும் அந்தணர்கள் இப்பாவத்தைப் போக்க, பிராயச் சித்த முறைகள் பல உள்ளன என்று கூறுகின்றார்கள்.

இதைக் கேட்டதும் மன்னன் கடுஞ்சீற்றம் கொள்கிறான். "உலக உயிர்கள் அனைத்தையும் சமமாகப் பாவித்துக் காக்க வேண்டியது அரசனின் கடமை. இளவரசன் என்பதற்காகப் பிராயச் சித்த வழியைக் கூறுகிறீர்கள்" என்று கூறியது மட்டுமன்றி, தன் மகனையே தேர்க்காலில் இட்டுக் கொல்கிறான். ஆன்பட்டதுயரம் எல்லாம் தான்பட வேண்டும் என்று இக்கொடுந்தண்டனையை நிறைவேற்றுகிறான். நினைக்க முடியாத மிகப் பெரிய கொடிய தண்டனை இது. மனித உயிரை, தேர்க்காலில் ஏற்றித் தெரிந்தே கொல்வது நடக்கக்கூடிய செயலா?

அருள் உள்ளம் படைத்தவர் சேக்கிழார். முத்தநாதன் மெய்ப்பொருள் நாயனாரைக் கொன்றான் எனக் கூற வேண்டிய இடத்தில்

“தான் நினைத்த அப்பரிசே செய்தான்” என்றவர் அவர். அப்படியானால் இதில் ஏதோ ஓர் உட்கருத்து இருக்கிறது.

வடவர் கோட்பாடு கொலை செய்தும் தப்பிக்கலாம் எக்கொடிய செயலுக்கும் பரிகாரம் உண்டு என்பது.

செய்த வினையின் பயனை நுகர்ந்தே தீர வேண்டும். அவ்வாறு நுகர்ந்து தீரும்வரை, செய்த பாவம் தொடரும். இதுதான் தமிழர் கோட்பாடு.

சேக்கிழார் இத்தமிழர் பண்பாட்டைக் காக்க, மனு நீதிச் சோழன் வரலாற்றைப் புனைந்துள்ளார். இதிலிருந்து ஒன்று தெளிவுபடுகிறது.

பிராயச் சித்தக் கோட்பாட்டை அறவே நீக்க வேண்டும். இன்று அடி முதல் முடிவரை இந்தியாவில் ஊழல் பெருத்ததற்கு இதுவே காரணம்.

நாளிதழ் முதல் வார, மாத இதழ்கள் வரை பரிகாரம் பற்றியே எழுதுகின்றன. அதர்வ வேதம் போல் இன்ன பாவத்திற்கு அல்லது கிரகதோசத்திற்கு இது பரிகாரம் என எழுதுகின்றன. இறைவனை நினை, எழுதிருந்து முயல்க, நல்வினை செய், தோசம் நீங்கும், பாவம் அகலும் என எழுதுவதில்லை.

இறைவழிபாட்டில் இந்த இந்தப் பதிகங்களை, வழிபாட்டுப் பாடல்களைப் பாடு நன்மைகள் வரும். செல்வம் கிடைக்கும், திருமணமாகும், குழந்தை பிறக்கும் என எழுதினால் மக்கள் நல்லதன் பக்கம் திரும்புவர்.

பிராயச் சித்தப் பக்கமே மக்கள் குவிவதன் காரணம் பாவம் செய்து, குறுக்கு வழி தேடி, வசதியாக வாழ நினைப்பவர்கள் தொகையே மிகுதி. உலகம் திருந்த, பிராயச் சித்தம் பற்றிய சிந்தனையை அறவே நீக்க அனைவரும் முயல வேண்டும்.

சேக்கிழார் பெருமான் காட்டும் வழி இது.

பாவம் செய்து பரிகாரம் தேடாதே
பரிகாரம் பயன்படாது, பாவம் தொலையாது

என்றிவ்வாறான முழக்க வாசகங்கள் நாடெங்கும் பரவவேண்டும்.

## அருச்சனை விளக்கம்

அர்ச்சனை என்ற வடசொல், திருமுறைகளில் மிக அருகியே காணப்படுகிறது. தேவாரத்தில் இரண்டொரு இடங்களில் மட்டும் உளது. ஆயினும் பழந்தேங்காய் வைத்து அருச்சனை செய்வது எந்த இடத்திலும் கூறப்படவில்லை.

இவ்வடசொற்கு ஈடாகத் தமிழில் ஏத்துதல் என்ற சொல் காணப்படுகிறது. பூசை, பூசனை என்பன சுத்தம் செய்தல், அலங்கரித்தல் என்ற பொருளில் வருகிறது. ஏத்துதல் இறைவன் புகழ் பாடுதல். 'பொருள் சேர் புகழை' அடுக்கிக் கூறி ஏத்துதல். 'ஆத்திசூடி அமர்ந்த தேவனை ஏத்தி ஏத்தித் தொழுவோம் யாமே' என்பார் ஔவையார். திருமுருகாற்றுப்படையில் நக்கீரர் இறுதிப்பகுதியில், 'மலைமகள் மகனே, மாற்றோர் கூற்றே, வெற்றி வெல்போர்க் கொற்றவை சிறுவ' எனப் பல அடிகளால் முருகன் புகழை அடுக்குவார். முடிக்கும் போது, "இவ்வாறு யான் அறிஅளவையின் ஏத்தி" என்பார்.

சேக்கிழார் காலத்தில் இசையோடு இறைவன் புகழைப் பாடுவதை விட்டு, வேறு சில முறைகளும் புகுந்தன போலும்

சுந்தரரிடம் சிவபெருமான் அருச்சனை பற்றிக் கூறியதாகச் சேக்கிழார், ஒரு புனைவைச் சேர்க்கின்றார். மற்றவை எல்லாம் தேவை இல்லை, அருச்சனை பாட்டே ஆகும் என்று அறுதியிட்டுக் கூறுகின்றார். "நமக்கும் அன்பிற் பெருகிய சிறப்பின்மிக்க அர்ச்சனை பாட்டேயாகும். ஆதலால் மண்மேல் நம்மைச் சொற்றமிழ் பாடுக" என்று கூறுகிறார்.

"திசையனைத்தின் பெருமை எலாம் தென் திசையே வென்றேற" என்பார் சேக்கிழார். "அசைவில் செழுந்தமிழ் வழக்கே அயல்வழக்கின் துறைவெல்ல" என்றும் பாடுகிறார். இவை சேக்கிழாருக்கும் பொருந்தும்.

பூசையைப் பூஜை ஆக்கியது தவறு. சூடு, ஜூடு ஆகும் கதைதான்! அது.

திருக்கோயில்களில் இறைத்திருவுருவைத் தொட்டு வணங்கும் முறை அதாவது இடைத்தரகரின்றிக் கும்பிடும் முறைதான் போற்றத்தக்கது. அதற்கேற்ப கோயிலமைப்பு மாற்றப்பட வேண்டும். ஒருவர் பின் ஒருவராகச் சென்று, இறையுருவின் பாதங்களில் நீர் ஊற்றி, மலர் தூவி வணங்கிச் செல்ல வேண்டும். வெளியில் இறைத்திருவுரு திருவுலா மூர்த்தியை வைத்து அலங்கரித்து, அங்கு இசை பாடி வணங்குதல், கூட்டுவழிபாடு எல்லாம் நடத்த வேண்டும்.

**வேத வைதிகரின் வெளி வேடம்**

கருப்பறியலூர் அந்தணர் போலவே சேய்ஞலூர் அந்தணரும் வெளியே திருநீற்றின் ஒளிவிளங்குமாறு பூசிக் கொண்டு, தாம் விரும்பும் வேள்விகளையும் செய்து கொண்டு வாழ்ந்தனர். ஆனால் கருப்பறியலூரார் பொய்யாத வாய்மையால் பூசை செய்தது போல் அல்லாமல் சேய்ஞலூரார் மறைமுகமாக சிவநிந்தனை செய்கின்றனர். அவர்கள் தாங்கள் செய்த வேள்விக்கு சிவனை அழைக்காத தக்கனைப் போல் நடந்து கொள்கின்றனர். மேலும் வியாச தருமர், மண்ணியாற்றங்கரையில், மணலால் சிவலிங்கம் எழுப்பிப் பூசை செய்தது பிடிக்கவில்லை. வியாச தருமரின் தந்தை எச்சதத்தினை அழைத்துக் கண்டிக்கின்றனர். அவர்களுக்குப் பணிந்து, எச்ச தத்தன், தன் மகன் செய்த சிவபூசையைச் சிதைக்கவே, மகனாலேயே தண்டிக்கப்படுகிறான்.

இவ்வரலாறுகள் உணர்த்தும் உண்மைகள், விரிவாக ஆராய்ந்து அறியத்தக்கன. அக்காலச் சமுதாயச் சூழ்நிலைகளும் இத்துணைத் தடங்கல்களிடையே தமிழ் தன்னைக் காப்பாற்றிக் கொண்ட சிறப்பும் விரிவாக ஆராயப்படவேண்டும்.

சமணர்களுக்கும் வைதிகர்களுக்கும் இடையே கடும்போட்டி நிலவியதென அறிகிறோம். வைதிகர்களைக் கண்டால் அடி, உதை, கொலை எனச் சமணர்கள் கொடுமைப்படுத்தினர். ஊர்களுக்கு நெருப்பு வைத்தனர்.

இதனால் வைதிகர்கள் தமிழரின் கோயில்களுக்குள் சரண் புகுந்து ஒளிந்து தப்பித்ததுண்டு. மேலும் உதிரிகளாக வாழாமல் கூட்டம் கூட்டமாக, ஒரு ஊர் முழுதும் தம்மவரே ஆக வாழ நேரிட்டது. அங்ஙனம் வைதிகர்களே கூடி வாழ்ந்த ஊர்களே திருப்பறியலூர், சேய்ஞலூர் போல்பவை ஆகும். வைதிகர்களுக்கு வேறுவழியின்றி, அவர்கள் தமிழர் சமயங்களுடன் ஒட்டி உறவாட நேரிட்டது. தமிழர்களுக்கும் சமணர்களின் கடுத்துறவு முதலியன பிடிக்கவில்லை. அதனால் வைதிக, தமிழர் சமயக் கூட்டணி உருவாயிற்று. கொள்கை அளவில் இரண்டும் பலநிலைகளில் முரண்பட்டவை. ஆயினும் தங்கள் சமயநெறிகளை, இருவரும் சிறிது தளரவிட்டு, ஒருவாறு சேர்ந்து வாழ்ந்தனர்.

காலப்போக்கில் சமணமதச் செல்வாக்கு குறையவே, வைதிகம் தனது மேலாண்மையை நிலைநிறுத்திக் கொண்டது. எந்தத் தமிழும் தமிழரும் தங்களைக் காப்பாற்றினரோ அவர்களையே அடிப்படுத்தி, தமிழிலிருந்த அனைத்து அறிவுச் செல்வங்களையும் தம்மதாக்கிக் கொண்டனர். அனைத்தும் வடமொழியிலிருந்து வந்ததாக கதை கட்டிவிட்டனர்.

வைதிகத்திற்கு செல்வாக்குக் கூடக் கூடத் தமிழர்களே வடமொழி வாணர்களாகி, இவ்வஞ்சக மாற்றங்கட்குத் துணைபோயினர்.

## முழுமுதற்பரம்பொருளாம் சிவன்

வடநூலார்க்கு பிரமன் ஒரு முக்கியக் கடவுளாவான். சிவநெறியில் சிவனே முழுமுதற்பரம்பொருள். பிரமனும் விஷ்ணுவும் நெருப்புப் பிழம்பாய் நின்ற சிவனின் அடிமுடி காண இயலவில்லை. தேவாரத் திருமுறைகளில் மிகக் கூடுதலாக சிவபரத்துவத்தை நிலை நாட்ட வந்த தொன்மம் இது.

பாற்கடலைக்கடைந்த பொழுது முதலில் வெளிப்பட்ட நஞ்சைக் கண்டு அஞ்சி நடுங்கிய தேவர்களுக்கு அபயம் அளித்து, அஞ்நஞ்சை எடுத்துத் தாம் உண்டு அனைவரையும் காத்தார் சிவபெருமான் அந்நஞ்சைத் தன் கண்டத்திலே அடக்கிக் கொண்டார் சிவன். அதனால்

நஞ்சுண்ட கண்டன் எனப்பட்டார். இது ஒரு மிகச் சிறந்த தொன்மம். திருமுறைகளில் சிவனின் அருள் உள்ளம் மிகவும் பாராட்டப் படுகிறது.

வடமொழி மரபில், வேத காலந்தொட்டு மேலுலகத் தேவர்கள் என்ற கூட்டத்தார் போற்றப்படுகின்றனர். அவர்களுக்குத்தான் அக்கினி மூலம் அவியுணவு அனுப்பப்படுகிறது. தமிழ் மரபில் தேவர்கள் அங்ஙனம் போற்றப்படுவதில்லை. மாறாகப் தேவர்கள் தக்கன் வேள்வி கேட்டு, உணவு கிடைக்குமென்று ஓடோடி வந்து நையப் புடைக்கப் படுகின்றனர். நஞ்சைக் கண்டு அஞ்சி சிவனால் காப்பாற்றப்படுகின்றனர்.

திருமுறைகளில் காணப்படும் புராணத் தொன்மங்கள் அனைத்தும் தொகுக்கப்படவேண்டும். ஏனைய பாடல்களை விடத் திருவாசகத்தில் இத்தொன்மங்கள் கூடுதலாக உள. இவை நேரடி உண்மைகள் அல்ல; மறைமுக உண்மைகள் (Indirect touth) என்பார், ரெனே வெல்லக். திருமுறைச் சான்றோர்கள், நாயன்மார்கள், அனைவரும் வெளிப்படச் சொல்லத் தயங்கியவற்றை, இத்தகைய தொன்மங்கள் மூலம் குறிப்பாக வெளிப்படுத்தியுள்ளனர். இவற்றை முழுமைாகத் தொகுத்து ஆராய்ந்தால் பல உண்மைகள் புலனாகும்.

தேவாரத்திற்குப் பொருள் தேடினால் அது தோசம், பாவம் என்று சொல்லி வைத்தது ஒருகாலம். அதனால் அண்மைக் காலம் வரை உண்மைகள் பல தெளிவுபட வெளிப்படாமலே போயின. இப்போது அம்மறைபொருள் உண்மைகளை அறிவியல் முறைப்படி ஆராய்வது, சமயவளர்ச்சிக்கு உதவும்; நமது அறிவு வளர்ச்சிக்கும் பயன்படும்.

# உண்மையைத் தேடும் ஒளிக்கதிர்கள்!

## ஆதி சைவர்களும் ஸ்மார்த்த பிராமணர்களும்

நெருப்பு சுடும்; மருந்து கசக்கும்; உண்மை சிலிர்க்கும்! அண்மைக் கால சமய நடைமுறைகளில் பழகியவர்களுக்கு இந்நூல் தரும் செய்திகள் அதிர்ச்சி தரும்; ஆத்திரமும் வரும். மறுக்க முடியாத நூற்சான்றுகளுடன் இவை எழுதப்பட்டுள்ளன. இக்கருத்துக்களை மறுக்க விரும்புவார், காரண காரியத்துடனும் சான்றுகளுடனும் மறுக்க வேண்டும். இறுதியில் உண்மையே நிலைக்கும்.

இது ஆரிய திராவிட ஆய்வன்று; பிராமண எதிர்ப்பு நூலன்று; சமஸ்கிருத மறுப்பு நூலுமன்று. இந்நூலில் வருபவை உண்மைகளின் வேர்களை வெளிப்படுத்துவதால் அவ்வாறு தோன்றக் கூடும். ஆனால் நம் நோக்கம் அதுவன்று. மறைந்து கிடக்கும் உண்மைகளை வெளிப்படுத்துகிற நல்ல நோக்கமே இது.

தமிழ் 'நீசபாஷை'; அது மந்திர சக்தியுள்ள மொழியன்று; திருக்கோயில் வழிபாடுகள், சடங்குகளுக்கு தமிழைப் பயன்படுத்தக் கூடாது. இவ்வாறு கூறப்படுபவை தவறானவை. இவை அனைத்தும் சமஸ்கிருதத்திற்கே பொருந்தும் என்பதே உண்மை. திருக்கோயிலை அறியாத, கோயில் வழிபாடற்ற சமஸ்கிருதத்தைத்தான் பயன்படுத்தக் கூடாது.

ஆதி சைவர்கள் வேறு; ஸ்மார்த்த பிராமணர்கள் வேறு. ஆதி சைவர்கள் முழுமைத் தமிழர்கள். வடமொழி வல்லாண்மைக் காலத்தில், தங்கள் உரிமைகள் பறிபோகாமல் இருக்க, வருமானம் தேட சமஸ்கிருத மொழியைப் பயின்று, அதைப் பயன்படுத்திக் கொண்டவர்கள். ஆதி சைவர்கள், பட்டர்கள், குருக்கள், சிவவேதியர் எனும் இவர்கள் மட்டுமே, 'முப்போதும் திருமேனி தீண்டி' அருச்சனை, பூசனை செய்தற்குரியவர்கள். இவர்களுக்கு ஸ்மார்த்த பிராமணருடன் கொள்வினை, கொடுப்பினை கிடையாது.

முப்போதும் திருமேனி, "தீண்டுவார்" (தொடுவார்) என்று கூறியதன் நுட்பம் உணரத்தக்கது. அதாவது சுத்தப்படுத்தலும் அலங்கரித்தலும் ஆகிய 'பூசனை' மட்டுமேயாம். 'முதற் சைவராம் முனிவர்', ஈன்றது தொன்மை மிக்கவர்கள் அவர்களே என உணர்த்துகிறது. ஏத்தி ஏத்தித் தொழும் அர்ச்சனைகளும் சிவவேதியர்க்கே உரியன என்பதும் பிறர்க்கு இல்லை என்பதும் அழுத்தமாய்க் கூறப்படுகிறது.

ஸ்மார்த்த பிராமணர்கள் கோயில் வழிபாடு அற்றவர்கள், வேள்விகளும், ஹோமங்களுமே அவர்கள் வழிபாடு. அவர்கள் கோயில்களை வெறுத்தார்கள். அவர்கள் வழிபாடு வேள்வி ஒன்றே. இன்று வருமானம் கருதி கோயில்களில் நுழைகின்றனர்.

ஸ்மார்த்தர்களை கோயில் கொடி மரத்துக்கு அப்பால் நுழைய விடுவதில்லை.

இன்று கோயில் வழிபாடு, சடங்குகளில் நுழைவது மகாதோஷம். இது அவர்களை ஏழேழு பிறவிக்கு நரகத்தில் தள்ளும் பெரும் தீங்காகும். முன்பு இதுவே அவர்கள் கருத்தாக இருந்தது. இன்று பிழைப்புக் கருதி மாறிக் கொண்டனர்.

தொன்று தொட்டுத் திருக்கோயில் வழிபாடு வேறு; வேள்விவழிபாடு வேறு. முன்னது உருவ வழிபாடு; பின்னது அருவ வழிபாடு.

ஸ்மார்த்தர்களின் தெய்வங்கள் அனைத்தும் மேலுலகில் உள்ளனர். அவர்களுக்கு அக்கினி மூலம் வேள்வி செய்து உணவு முதலியவற்றை அனுப்புகின்றனர்.

மக்களுக்குப் பயன்படும் அனைத்தும் மேலுலகத்தேவர்களுக்கு, அக்கினியில் போடப்படுகின்றன. அவை அவியுணவு எனப்படும். அவி சொரிந்து ஆயிரம் வேட்டல் என்பது திருக்குறள்.

ஸ்மார்த்த பிராமணர்களைத் திருக்கோயில்களை விட்டு வெளியே நிறுத்த வேண்டும் என்பர். காஞ்சி மகா சுவாமிகள் ஸ்மார்த்தர். அவர் கோயில்களை வெறுத்தவர்களின் வழி வந்தவர். அவர் இப்போது

வருமானம் புகழ் முதலியன கருதி, காவலர் துணையுடன் திருநெல்வேலியிலும் பழனியிலும் கோயிலினுள் நுழைந்தார். மக்கள் பேராரவாரம் செய்து இதை எதிர்த்தனர். கேவலம்! கொள்கையை விட்டுவிட்டு, ஸ்மார்த்தர்கள் கோயில்களுக்குள்ளேயே, சுற்றித் திரிவதுடன், தமிழை இழிவுபடுத்தும் பணிகளைச் செய்த வண்ணம் உள்ளனர். இவை தவறானவை எனத் தெளிவுற அறியலாம்.

வேதம் வேறு; வேதாந்தம் வேறு. இரண்டையும் போட்டுச் குழப்பி, மற்றவர்களை முட்டாள்கள் ஆக்கி விடுகின்றனர்.

வேதம் என்பது இருக்கு வேதமே. பிறகு அதிலிருந்து பிரிந்து, வளர்ந்தவை யஜுர், சாமம். இவற்றைத் 'த்ரயீ' என்றனர். மிகப் பிற்பட வந்த அதர்வ வேதம் முழுவதும் பில்லி, சூனியம், மனித வாழ்வில் செய்யும் அனைத்துப் பாவங்களையும் தோஷங்களையும் நீக்கும் பரிகாரம் என இவை போல்வன உள்ளன. இன்று பிராமணர்களுக்கு இதில் வரும் பலவகைப் பரிகார ஹோமங்களே சோறு போடுகின்றன எனலாம்.

இருக்கு வேதம் ஆரிய திராவிடப் போராட்டம் பற்றியே பெரிதும் பேசுகிறது. அவற்றில் தங்களை 'அசுரர்களிடமிருந்து' காக்குமாறு வேண்டும் புலம்பல்களும் வெற்றி பெற்றுத் தருமாறு வேண்டுதல்களும் உள்ளன. இவை காலத்தால் முற்பட்டவை.

கங்கைச் சமவெளியில் நிலை பெற்ற பிற்பாடு, தோன்றியவை பிராம்மணம், உபவேதங்கள், உபநிடதங்கள், புராணங்கள் எனப் பலவாகும். இவை காலத்தால் பிற்பட்டவை. இவற்றை மூன்றாகப் பகுக்கலாம். 1. அத்துவைத உண்மைகள் 2. ஆரியர்களின் பழக்க வழக்கங்கள், சடங்குகள் முதலியன 3. தங்கள் காலத்தனவும் தங்களை எதிர்த்தனவும் தங்கள் கொள்கைகளுக்கு முரண்பட்டனவுமான சமணம், புத்தம், தெற்கே சைவ வைணவத் தமிழ்ச் சமயங்கள் ஆகிய இவற்றை மறைமுகமாக அழித்தனர். இவற்றிலிருந்த நல்லன எல்லாம் தம்மிடமுள்ளன எனக் காட்டமுயன்றனர். அனைத்தையும் சமஸ்கிருத மயமாக்கி எல்லாமே தம்மிடமிருந்து வந்தனவாகக் காட்டினர். எதிர்ப்பானதை அணைப்பது போல் காட்டி அழித்தனர். இவை அனைத்தையும் செய்ய நூறு வகை உபநிடதங்கள் முதலியவற்றைக்

காலந்தோறும் எழுதிக் கொண்டனர். இறுதியில் சொன்ன இதனை நன்கு விளங்கிக் கொள்ள வேண்டும். மேலும் இவை முழுமையாக ஆராய்ந்து எழுதப்பட வேண்டும்.

களப்பிர, பல்லவ, நாயக்கர் ஆட்சிக் காலங்களில் சமஸ்கிருதம் மிகவும் போற்றப்பட்டது. பல்லவர் ஆட்சி செய்த போது, ஐந்தாறு நூற்றாண்டுகள் ஆட்சி மொழியாய் இருந்தது.

இன்று ஆங்கிலம் கற்றாலன்றி வாழ்வில்லை என்பது போல், சமஸ்கிருதம் கற்றாலன்றி வாழ்வில்லை என்ற நிலை இருந்தது. தமிழர்களே சமஸ்கிருதம் கற்று, அதில் எழுதி, தமிழர் கலை, சிற்பம், தொழில் பலவற்றையும், அம்மொழியில் எழுதிப் படித்துக் கற்று கற்பித்து, வாழ்ந்தனர். அரசின் புறக்கணிப்பால் தமிழ் ஒதுக்கப்பட்டாலும் மக்களும் புலவர்களும் சிறிதும் விட்டுக் கொடுத்திலர்.

சமஸ்கிருதம் கற்றவர்கள் சிவஞான முனிவர் போல்வார் பலர் இங்ஙனம் விளங்கினர். இவ் ஆறேழு நூற்றாண்டுகளில், தமிழர் கல்வி, கலைகள், கோயில் சடங்குகள் வழிபாடு அனைத்தையும் சமஸ்கிருத மயமாக்கினர். அடிமைத் தமிழர்களே இதற்குத் துணை போனதுதான் கொடுமை.

சமஸ்கிருதம் தேவ பாஷை என வணங்கப்பட்டது. தென்னாட்டிற்கேயுரிய, தென்னகத்தில் மட்டுமே விளங்கிய பரத நாட்டியம் காஷ்மீரத்தில் இருந்து வந்தது என்றனர். கையினால் ஒரு சிற்றுளி பிடிக்கத் தெரியாத இக்கூட்டத்தார் நம் சிற்பக் கலை, கட்டிடக் கலை பற்றிய அனைத்தையும் அழித்துவிட்டு, தம் மொழியில் எழுதி வைத்துக் கொண்டு, அனைத்துமே தமிழர்க்கு நாங்கள் தந்தனவே என எழுதினர். சமயம், இசை, நாட்டியம், சிற்பம் கட்டிடக்கலை அனைத்தின் கலைச் சொற்களையும் சமஸ்கிருதமாக்கினர்.

இது ஒரு நீண்ட கொடிய வரலாறு. தமிழர் சமயம் எனப்படும் சிவ, வைணவ வழிபாட்டு மெய்ம்மைகள் பற்றிய தமிழ் நூல்கள், வானியல் உண்மைகள், கணியம் (சோதிடம்) போல்வனவும் உருமாற்றப்பட்டன. ஒன்று கூட இல்லாமல் அழித்து விட்டனர்.

இக்கொடிய வரலாற்றின் ஒரு கூறு இந்நூலில் ஆங்காங்கு சுட்டிக் காட்டப்படுகிறது. தமிழறிஞர் யாரேனும் முன்வந்து இவை அனைத்தையும் தமிழில் மீட்டுருவாக்கம் செய்யும் நிலையில் நாம் உள்ளோம்.

ஆகமம் – பற்றிய கதையும் இதுதான். ஆகமத்தின் முதல் நோக்கம் அவ்வக் காலக் கடவுள் வழிபாட்டு நெறிமுறைகளை, சடங்குகள் செய்யும் வழி முறைகளைக் கூறுவது.

இவை 'கையேடுகள்' போன்றவை என்பர். காலந்தோறும் இவை மாறுவன. இவற்றுடன் கோயிற்கலை சார்ந்த நாட்டியம், இசை, சிற்பம், பிற கருவிகள், கோயில் கட்டும் நெறிமுறைகள் எல்லாம் தமிழ் ஆகமத்தில் இருந்தன.

தமிழ் ஆகமங்களில் தங்கட்கு ஒவ்வாதவற்றை அழித்தனர். மீதமிருந்தவற்றை, சமஸ்கிருதமாக்கிக் கொண்டனர். இதில் அதிதீவிர, அத்துவைதக் கூட்டம், கோயில் பற்றிய வெறுப்பில் அது தொடர்பான பலவற்றை அழித்துவிட்டனராம். கோயில் வழிபாட்டிற்கும் ஸ்மார்த்த பிராமண்ர்களுக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை. இருந்தும் வருமானம் கருதி நுழையக் கூடாத இடத்தில் நுழைந்த இவர்கள், கோயிற் பூசை, சடங்குகள் எதையும் தமிழிற் செய்யக் கூடாது; செய்வது தோஷம் என்று புலம்புகின்றனர்.

சமண, புத்த மதச் சமயங்களின் செல்வாக்குக் காலத்தில், அவற்றின் தாக்குதல் தாங்காமல் இப்பிராமணியம் தமிழையும் தமிழர் சமயங்களையும் பற்றிக் கொண்டு தமிழர் கட்டிய கோயில்களுக்குள் சரண் புகுந்து, தன்னைக் காப்பாற்றிக் கொண்டது. தமிழரும் பேரளவில் அவர்களை ஏற்க வேண்டியதாயிற்று. தமிழர் சமயங்களான சிவநெறி, திருமால்நெறி, கொற்றவை (சக்தி) நெறி ஆகியவற்றைக் காத்துக் கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டது. இந்தக் கொள்கை இல்லாக் கூட்டணியால் விளைந்த தீமைகள் நன்கு விளக்கப்பட வேண்டும்.

மேலே சுட்டிய அனைத்தையும் முதலில் ஏற்பது கடினமாக இருந்தாலும், பிறகு உண்மை இதுவென உணரப்படும். தமிழரிடையே ஓரளவேனும் விழிப்புணர்வு ஏற்பட்டு, மேற்கொண்டு செயற்படக் கூடுமேல் அதுவே மறுமலர்ச்சிக்கு வித்திடும் எனலாம்.

# தமிழக அந்தணப் பார்ப்பனரும் குடியேற்றப்பட்ட பிராமணர்களும்

1. செந்தமிழ் அந்தணர்கள் மீது நமக்குப் பகைமை இல்லை. சங்க காலக் கபிலர், பரணர், பாலைக் கௌதமனார், தாமப்பல் கண்ணனார், பெருங்குன்றூர்ப் பெருங்கௌசிகனார் எனக் குறிக்கப்படும் அந்தணர்கள், தம் வேதங்களைப் பயின்றாலும் தமிழரோடு தமிழராகி வாழ்ந்தனர். அவர்கள் தமிழை வளர்த்துத் தாமும் வளர்ந்தனர்.

2. சங்க காலந்தொட்டு, வேள்வி செய்யத் தமிழ்வேந்தர்களால், குடியேற்றப்பட்ட புரோகிதப் பார்ப்பனர்களாலும் களப்பிர பல்லவர் காலத்துக் குடியேற்றப்பட்ட பிராமணர்களாலும் நாயக்க மன்னர்கள் குடியேற்றிய தெலுங்குப் பிராமணர்களாலும் இன்றளவும், தமிழைப் புறக்கணித்து, அவமதிக்கும் உணர்வு நீடிக்கிறது.

3. இவர்கள் எல்லோரும் 'ஸ்மார்த்த பிராமணர்கள்' எனப்படுவர். வேதம் ஓதுதலும் வேள்வி செய்தலுமே இவர்கள் வழிபாடும் தொழிலுமாகும். ஸ்மார்த்தர்களுக்கு ஹோமம், யக்ஞம் மட்டுமே வழிபாடு. அவர்களுக்குக் கோயில் வழிபாடு அறவே இல்லை. நான்கு வேதங்கள், கீதை எதிலும் கோயில் என்ற சொல்லே இல்லை. கோயில் வழிபாடு பற்றிய சிறுகுறிப்பும் இல்லை, மேலும் அவர்கள் கோயிலை வெறுத்தனர். பி.டி.எஸ். தம் தமிழர் வரலாற்றில் கூறுகிறபடி, "They were comtempt of entering into temples". தமிழர்களும் அவர்களைக் கோயிலில் கொடிமரத்திற்கு அப்பால் நுழைய விடாதபடி தடுத்தனர். அவர்களில் சிலர் கோயில் மடைப்பள்ளி வரை நுழைந்து, 'சோம்பாயி' என வாழ்ந்தனர். இறைவனுக்குப் படைக்க சர்க்கரைப் பொங்கல், வெண் பொங்கல் போல்வனவற்றைச் சமைத்துக் கொடுப்பது இவர்கள் பணியாகும்.

4. முன்னைய காஞ்சிச் சங்கர மடத்துச் சந்திரசேகர மகாசுவாமிகள், தம் கொள்கைப்படி வாழ்ந்தார். பிறகு வந்தவர் தான் திருநெல்வேலியிலும் பழனியிலும் காவலர் உதவியுடன், மக்களின் எதிர்ப்பையும் பொருட்படுத்தாது கோயில் உள்ளே நுழைந்தார். திருவண்ணா மலையில் இறைவனுக்கு வயிர அணிகலன் செய்து கொடுத்தாரென்பர்.

5. சிவநெறியின் வினைக் கோட்பாடும் வைதிக நெறியும் நேர்முரண்பட்டவை. இருக்கு வேதத்தில் 'ரித்விக்குகள்' என்பாரே, வேள்விகளைச் செய்து வைக்கும் தலைமையானவர்கள். பிற்காலப் புரோகிதர்கள் அவர்வழியினரே. இவர்கள் வேள்விகளில் சிறுசிறு குற்றங்குறை நேர்ந்தால், அவற்றை நீக்கியருளும்படி பரிகாரங்களுக்கென யக்ஞங்கள் செய்தனர். இதுவே வடமொழி நூல்களனைத்தையும் பரிகாரக் களஞ்சியங்கள் ஆக்கிவிட்டது. ஒருவர் செய்த கொடிய தீய செயல்களுக்கும் பரிகாரம் உண்டு! கிரக தோசத்தைப் பரிகாரத்தால் நீக்கிவிடலாம் என்பனவே தமிழர்களை மயக்கிவிட்டன. தப்பிக்க முடியாது என்பவனைவிட, தப்பிக்கலாம் என்பவன் இன்று நாட்டை ஆட்டிப் படைக்கிறான்.

பிற்பட்டதெனக் கூறப்படும் அதர்வவேதம் முழுவதும் சூதில் வெல்ல, பில்லி சூனியம் வைத்துப் பகைவரைக் கொல்ல, 'பஞ்சமா பாதகம்' என்னும் கொலை களவு காமம் முதலிய எதனையும் செய்து தப்பிக்க, ஹோமங்கள், யக்ஞங்கள் உள்ளன. வடமொழி மந்திரங்கள் இத்தோசம் அனைத்தையும் நீக்கவல்லவை. பணச் செலவுக்கு ஏற்ப எப்பாவத்தையும் போக்கலாம். இவ்வாறு நம்ப வைத்தனர். கணபதி ஹோமம், ஆயுஸ் ஹோமம் உட்பட, புண்ணியம் சம்பாரிக்க மந்திரங்கள் பல உள்ளன. நல்லவனாக, நற்பண்புள்ளவனாக, கொலை களவு காமத்தில் ஈடுபடாதவனாக இருந்து புண்ணியம் சேர்க்கலாம் என்று அறிவுரை கூறுவதற்குப் பதிலாக, இவ்வாறு பாவ நீக்கம், தோசநிவர்த்தி, கிரகபலனை மாற்றுதல் எனக் குறுக்கு வழிகளையே கற்பித்ததால், நல்லியல்புடைய அந்தணர்கள் 'அதர்வ வேதத்தை' ஏற்கத் தயங்கினர் என்கிறார் 'ஸ்வாமி' என்பவர்.

செய்த வினைக்குப் பயனுண்டு, அதில் தப்பவே முடியாது, இறைவன் வகுத்த வகையாதலால் அதனை இறைவனும் மாற்றமாட்டான் என்கிறது, சிவநெறி. திருவள்ளுவர் வினைப்பயன் 'வீயாது பின்சென்று அடும்' என்பார். இது பிறவிதோறும் தொடரும், செய்த வினை அனுபவித்துத் தீரும் வரைவிடாது என்பர். ஒரு குழந்தையைக் கொன்றுவிட்டுக் கும்பாபிசேகம் செய்தால், செய்த பாவம் தீராது; இரண்டையும் தனித்தனியே அனுபவித்தே தீர வேண்டும் என்பது தமிழ்நெறி.

திருக்கோயில்களுக்குள் நுழைந்து பூசை செய்யும் வழக்க முடையவராக, சிவாச்சாரியார்கள், பட்டாச்சாரியார்கள் விளங்கினர். சேக்கிழார் இவர்களையே, 'முப்போதும் திருமேனி தீண்டுவார்' என்றார். இவர்களுக்கும் ஸ்மார்த்த பிராமணர்களுக்கும் தொடர்போ, உறவோ இல்லை; பெண் கொடுப்பினை கொள்வினை இல்லை. குருக்கள், பட்டர் எனப் பட்டம் சூட்டிக் கொள்ளும் இவர்கள் தூய தமிழர்கள். பல்லவர் காலத்தில் சமஸ்கிருதம் கற்றவர்களுக்கே கோயிலில் அருச்சகர் வேலை, அரச பதவிகள், அதிகாரிகள், ஆசிரியர்கள் பணி என இருந்ததால், இன்று ஆங்கிலம் கற்பது போல், அன்று அனைவரும் சமஸ்கிருதம் கற்று வயிறு கழுவ வேண்டி இருந்தது. அதனால் அன்று சமஸ்கிருதம் கற்று, வேலை தேடிய இவர்கள், இன்று தொழில் கருதி, அது வேறுயாருக்கும் மாறிவிடக் கூடாதென்று சமஸ்கிருதமே ஆகமப்படியானது என்று கதைத்து, தந்நலம் தேடுகின்றனர். இன்று ஆங்கில மேலாண்மையை எண்ணிப் பாருங்கள். வடமொழி மேலாண்மை ஐந்து, ஆறு நூற்றாண்டுகள் கோலோச்சியது. விடுதலை பெற்ற பின்பும் ஆங்கில வல்லாண்மையை விடமுடியாதது போல, அன்று பின்னால் வந்த தமிழரும் வடமொழியைப் போற்றியே வாழலாயினர்.

பூசனை - என்பது தூய தமிழ்ச் சொல். பூசுதல் - எண்ணெய்க் சாப்பிட்டு, நீரால் தூய்மைப்படுத்தல். அதற்கு அலங்கரித்தல் என்றும் பொருளுண்டு. சந்தனம் பூசிக் கொள்வது போல், இறைத்திருமேனியை நறுமணப் பொருள்களால் அலங்கரித்தல்.

பூவும் நீரும் கொண்டு இறை உருவைத் தொட்டுப் பூசனை செய்தல் பற்றி நூற்றுக்கணக்கான இடங்களில் வருகிறது.

மற்றபடி அருச்சனை என்பதும் இறைவன் முன்சென்று திருவடிகளில் நீரூற்றி, மலரிட்டு இசைபாடி வணங்குதலே அன்று நடந்தது. அருச்சனை - இறைவனின் பொருள் சேர் புகழை ஏத்தி ஏத்தித் தொழுதல்.

இன்றும் வடக்கே காசி, கேதாரம், சீர் சைலம் என அனைத்து இடங்களிலும் இதைக் காணலாம். இந்திய நாடு முழுவதும் தமிழகமாக இருந்த காலந்தொட்டு நடைமுறையில் இருந்து வருவது இது.

தென்னாட்டில் புகுந்த பார்ப்பனரே, தம் வருமானம் கருதி, இறைத்திருவுருவங்களைக் கருவறைக்குள் சிறைப்படுத்தி, இருட்டில் வைத்து, பழந்தேங்காய் அருச்சனை என்று தட்சணை வாங்கிப் பிழைக்கின்றனர்.

பன்னிருதிருமுறைகளில் - குறிப்பாக அடங்கன் முறை எனப்படும் தேவாரம் பல ஆயிரம் பாடல்களில் ஓரிடத்தில் கூட, இப்பழந்தேங்காய் அருச்சனை, தட்சணை இடம்பெறவே இல்லை. ஆகமப்பூச்சாண்டி காட்டுவார், ஒரு சான்றாவது காட்ட வேண்டும்.

இதனை ஆகம முறை என்று சொல்வது எவ்வாறு பொருந்தும் என விளங்கவில்லை.

வேள்வி அருவ வழிபாடு; கோயில் உருவ வழிபாடு. அருவ வழிபாட்டினர், உருவ வழிபாட்டு நெறிமுறை கூறும் ஆகமங்களைத் தங்களது என்பது சற்றும் கொள்கையற்ற இழி செயலன்றோ?

காசியில் பண்டாக்கள் விசுவநாதரைச் சுத்தப்படுத்தலும், சுற்றிலும் தூய்மைப்படுத்தலும், அலங்கரித்தலும் மட்டுமே செய்கின்றனர். வழிபாடு செய்ய வரும் பக்தர்கள், சிவத்திருவுருவைத் தொட்டு, கங்கை நீரைச் சிறிதளவு ஊற்றி, மலர்களைத் தூவி வணங்கி வரிசையில் செல்கின்றனர்.

'போதொடு நீர் சுமந்தேத்திப் புகுவார் அவர்பின் புகுவேன்,' என்பது அப்பர்வாக்கு. இம்முறை வடநாட்டில் இன்றும் நடைமுறையில் உளது. வடநாட்டில் இவ்வாறு தன்னைத் தொட்டு, மனங்குளிர, ஆவல்தீர

வணங்குதற்குப் பக்தனை அனுமதிக்கும் அதே இறைவன் இங்கு அவ்வுரிமையை மறுப்பானா? இங்கு தூரத்தே நம்மை நிறுத்துவதால், பல சமயங்களில் பார்ப்பனரின் முதுகையே வணங்கிப் போக நேர்கிறதே? இப்பார்ப்பனர்கள் கருவறைக்குள் அங்கும் இங்கும் போக அவர்களின் பூணூல் போட்ட முதுகையே பெரிதும் வணங்க நேர்கிறது. குடமுழுக்கு விழாவிலும் இதே கதைதான்.

தமிழகத்திலும் அனைத்துக் கோயில்களிலும் பூவும் நீரும் கொண்டு, நேரே தொட்டு வணங்கும் முறை வரவேண்டும். ஒரு கோயிலிலாவது செய்து பார்க்க, உண்மையான பக்தர் ஒருவராவது வரமாட்டாரா?

ஹோமம், யக்ஞம் (வேள்வி) என்பன தமிழ் மரபன்று, எனவே பொது இடங்களிலும் திருக்கோயில்களிலும் இவை தவிர்க்கப்பட வேண்டும். தமிழர்கள் ஹோமங்களை அறவே கைவிட்டு, திருவிளக்கு வழிபாடு, முற்றோதல், இசை வழிபாடு, மன ஓர்மைத் தியான வழிபாடு என மாறிக் கொள்வதே, அவர்களுக்கு நல்வாழ்வு தரும்.

ஹோமம் என்ற பெயரால் ஆயிரக்கணக்கான இடங்களில், மக்களுக்குப் பயன்படும் அனைத்துப் பொருள்களும் அக்கினியில் போடப்படுவது மிகக் கொடிய பாவம். தூய்மை செய்து, நறுமணப் பொருள்களால் அலங்கரிக்க வேண்டிய இறைவனுக்கு, நூறு பாற்குடம் என்று ஊற்றுவது கண்டு, இறைவனே கண்ணீர் விடுகின்றான். தீர்த்தக் குடம் என்று முன்பு வழிபட்டவர்களைப் பாற்குடம் என மாற்றியதும் புரோகிதப் பார்ப்பனரே. திருக்கோயில் சீர்திருத்தங்கள் வந்தாலன்றி, இந்தியநாடு உருப்படவே உருப்படாது. அடித்தட்டு மக்களாக, ஏழை எளியோராய் வாழும் பல ஆயிரம் மக்களின் பசியை ஆற்றவல்ல பழம், பால் முதலான பொருள்களை அக்கினியில் போடும் புரோகிதப் பார்ப்பனர் செயல் கொடிதன்றோ?

பாலபிசேகம் என்று பல நூறு குடம் பாலை இறைத்திருமேனியில் ஊற்றுவது கொடிய பாவம். ஏழை மக்கள் பாலின்றி, ஊட்டச் சத்தின்றி வாட, இறைவன் - தான் அவற்றை அபகரித்துக் கொள்ள நினைப்பானா? ஆரியச் சடங்குப் பார்ப்பனர் செய்யும் கொடுமை இது.

தமிழர்களிடமும் இக்குறைகள் உண்டு. எனினும் அதைப் பயன்படுத்தி, சடங்குகளாக்குவது புரோகிதர் செயலாகும். செய்த பாவம் - குற்றம் - தீமை தீர வேண்டுமேல், அதிலிருந்து திருந்த வேண்டும்; செய்ததற்கு அழ வேண்டும்; இறைவனிடம் தண்டனிட்டு அதன் கடுமையைச் சிறிது குறைத்துக் கொள்ள முயல வேண்டும். எனினும் 'அது நல்வினையோ, தீவினையோ' தொடரவே செய்யும். அடி பலமாக விழாமல் பார்த்துக் கொள்ளலாம் என்பர், பெரியோர். தீமையிலிருந்து விடுபட நன்மையை நாட வேண்டுமே தவிர, பரிகாரங்களைத் தேடக் கூடாது.

இப்பொழுது சொல்லுங்கள், மக்கள் எப்பக்கம் செல்வர். இறைவனுக்குப் புல்லிலை எருக்கம் பூதான் கிடைத்ததென்று, அதைச் சூட்டி உள்ளன்போடு வணங்கும் பக்தனுக்கும் - 'எப்படியோ' சேர்த்த பணத்தில் முப்பத்தைந்து இலட்சத்தில் வைரமுடி சூட்டும் பக்தனுக்கும் வேறுபாடு உண்டா, இல்லையா?

இறைவன் தனக்காகச் செலவழிக்கும் பணத்திற்கு ஏற்ப வரம் தருவார், செல்வ வளம் தருவார்; பாவம் போக்குவார், தோசம் நீக்குவார் என்றால், அவர் 'புண்ணிய வாணிகம்' செய்யும் ஒரு வணிகரா? அல்லது கடவுளா?

முரண்பட்ட இதனை மாற்றி, 'வைதிக சைவம்' எனப் பெயரிட்ட, உமாபதி சிவம் மட்டுமே, சிவநெறிச் சாத்திரங்களில், பணம் செலவிட்டுப் பாவம் போக்கும் பரிகாரம் பற்றிப் பேசுகிறார் எனவும் அவர் ஒரு பிராமணராதலின் இப்படி எழுதி விட்டார் என்றும் ஒரு செருமன் பேராசிரியர் சைவ சித்தாந்தம் பற்றித் தாம் எழுதிய நூலில் குறிப்பிடுகிறார். இதனை மேலும் ஆராய வேண்டும்.

1. தமிழருடன் கலக்கு முன் வேதம் முழுவதும் முழங்கியது 'சுவாஉறா' எனும் மந்திரமே. தமிழருடன் பழகிய பின்தான் அவர்கள் 'நமஹா' என்று தோத்திரம் சொல்லக் கற்றனர்.

2. சமணமும் புத்தமும் ஏன் தோன்றின தெரியுமா? இவ்வைதிகர்களின் கொலை வேள்வி, பரிகாரப் பாவநெறிமுறைகள், பண்பையும் அன்பையும் கற்பையும் மற்றும் நல்லன எதனையும் கைவிட்டேனும் வாழலாம் என்ற நெறிகள் போலும் இவைகளை வேரோடு சாய்க்கத் தோன்றின.

3. தென்னாட்டில் சமணம் களப்பிர, பல்லவ அரசுகளின் சமயமாதலின், அரசியல் செல்வாக்குடன் பரவியது. வைதிகம் பெரும் தாக்குதலுக்கு ஆளானது. வெளியே தலை காட்ட முடியாதபடி அடி, உதை, நெருப்ட வைத்தல், சித்திர வதை செய்தல், ஓடஓட விரட்டியடித்தல் கட்டாயப்படுத்தி மொட்டையடித்தல் என நாடெங்கும் நெருப்புப் போல் பரவியதால், வைதிகப் பிராமணர்கள் நிலை குலைந்து போயினர்.

இந்நிலையில் அவர்கள் தங்களைக் காப்பாற்றிக் கொள்ள, நம் சிவக்கோயில்களில் சரண் புகுந்தனர்; திருநீறு பூசி (வெளி வேடமிட்டு) ஊருக்குள் வெளிப்பட்டனர். சிவநெறி, திருமால் நெறி, கொற்றவை (சக்தி) நெறி மூன்றும் தமிழருடையனவாதலின் அச்சமயங்களைப் புறத்தே தழுவிக் கொண்டனர். நாமாவளிகள் எழுதிப் பாடி, தப்பிக்க வழி தேடினர். உள்ளே வேள்வி செய்தல், வேதம் ஓதுதலையும் செய்து கொண்டு, வெளியே தமிழர் சமயங்களையும் தழுவுவார் போல் நடித்துக் கொண்டு, வாழ வேண்டியவர்களாயினர். இன்றளவும் 'இந்த இரு பிறப்பாளராக' அவர்கள் வாழ்வதே, பெருங்கேடாகும்.

நம் தமிழ்ச் சமய நெறியினரும் அவர்களைத் தழுவிக் கொண்டனர். சமணமும் புத்தமும் அயற்சமயங்கள் - அயல் மொழியின - அயலவருடையன என எண்ணி, தம்மவர் போல் நடித்த வைதிகர்களுடன் ஒரு 'கொள்கை இல்லாக் கூட்டணி' வைத்துக் கொண்டனர்.

இதில் இன்னொரு வரலாற்றுக் குறிப்பு என்னவென்றால், இங்கு வேள்விக்கு என்றும் பிறவாறும் குடியேறிய வைதிகர்களில் ஆண்களே மிகுதி; பெண்களுடன் வந்தவர்கள் குறைவு.

அவ்ஆடவர்கள் தமிழ்ப் பெண்களையே மணந்தனர். இவ்வாறு இருபாலருக்கும் இடையே குருதிக் கலப்பும் ஏற்பட்டது. இன்றைய தமிழ்ப்பார்ப்பனக் குடும்பங்களில் வழங்கும் வட்டார வழக்குச் சொற்கள், உறவுப்பெயர்கள், ஊருடன் சேர்த்தே பெயரைக் கூறிக்கொள்வது போன்ற தமிழ் மரபுகள் இதைக் காட்டும். இத்தகையவர்களுக்குப் பிறந்த குழந்தைகளை முதலில், வைதிகர் ஏற்க மறுத்தனர். பிறகு உபநயனம் என ஒரு சடங்கு செய்து, அவர்களை உண்மையான வைதிகப் பிறப்பினராக்கி ஏற்றுக் கொண்டனர். எனினும் வடநாட்டு வைதிகர்கள் இவர்களை பிரஹ்ம இராட்சதர்கள் என்று அழைத்தனர், என்பார் பி.டி. சீனிவாசர்.

வடநாட்டிலும் விசுவாமித்திரர் வழியினர் அனுமன் வழியினர் பலர், இக்கலப்பில் பிறந்த குடியினரே. இராவணனும் இத்தகைய பிராமணனே. அவனுடைய தாய் அரக்கி, தந்தை வைதிக ரிஷியாவார்.

இக்கொள்கையில்லாக் கூட்டணியை அமைத்து, சமணம் புத்தம் ஆகியவற்றின் செல்வாக்கை ஒழித்தனர். பிறகு அரசர், பிரபுக்கள் போல்வாரைக் கையில் போட்டுக் கொண்டு, எந்தத் தமிழர் சமயங்களும் தமிழும் தங்களைக் காப்பாற்றினவோ, அவற்றையே சிறிதும் நன்றியின்றிச் சமஸ்கிருதமயமாக்கினர்.

முதலில் தமிழ் இசை நாடகக் கூத்துக் கலைஞர்களாம் பாணர், பொருநர், கூத்தர், விறலியர் வாழ்வை அழித்து, அக்கலைகளைத் தம்மதாக்கிக் கொண்டனர். இதற்கு அரசர்களைத் தம் கையில் போட்டுக் கொண்டனர்.

அடுத்து சிவநெறியை முழுவதும் உருமாற்றி, அச்சமயம் சார்ந்த அத்தனை சொற்களையும் அழித்து, அவை அனைத்தையும் சமஸ்கிருதமயமாக்கினர். அச்சமயம் தமிழ் மக்களிடம் பரவாமல் போக இது வழி செய்தது.

தமிழர் சிவபோற்றி! சிவசிவ போற்றி! சிவமே போற்றி! என முழங்கியதையே, சிவாயநமஹ என மாற்றினர் என ஒரு பெரியவர் குறிப்பிடுகிறார்.

சமுதாயத்தில் அரசர் முதலான மேனிலையில் உள்ளவர்களுடன் கலந்து கொண்டு, தமிழரின் வானியல், கணியம், மருத்துவம், அறிவியல், வாழ்வியல் சடங்குகள் அனைத்தையும் சமஸ்கிருதமயமாக்கி, தமிழன் அனைத்தையும் தம்மிடம் இருந்தே பெற்றதாகப் பறை சாற்றினர்.

ஒரு சிற்றுளியைப் பிடிக்கத் தெரியாத இவர்கள் சிற்பக்கலை தம்மதே என்றனர். தமிழகம் உட்படத் தென்னாட்டில் மட்டுமே காணப்பட்ட நாட்டியக் கலையை, காசுமீரத்திலிருந்து வந்தது என, நெடுந்தொலைவுக்கு அப்பால் கொண்டு சென்று கதை கட்டினர்.

தமிழ் மேளகாரர் எனப்படும். இசை மேதைகளிடம் கற்றுக் கொண்ட இசையை, ஒரு தெலுங்குப் பிராமணர் தமது மொழியில் பாடி வைக்கவே, இன்று தமிழிசையைத் துக்கடாவாக்கி, இழிவுபடுத்தினர்.

தொல்காப்பியர் 'மறைமொழி கிளந்த மந்திரம்' என்றார். சேக்கிழார் 'முந்தை மறை ஆயிரம் மொழிந்த திருவாயான்' என்று சிவனைப் போற்றினார். இங்ஙனம் தமிழரின் திருமறைகள் பற்றி ஆயிரம் குறிப்புக்கள் உள. அவற்றை எல்லாம் அழித்துவிட்டு, எங்கள் வேதமே பெரிதென வாய்கூசாது பேசுகின்றனர்.

வேதம் வேறு; வேதாந்தம் வேறு! உபநிடதம் முதலானவையே வேத சிரஸ், வேதாந்தம் எனப்படும். வேதங்களில் உள்ளவை, தங்கள் எதிரிகளாம் தஸ்யூக்களை, திராவிடர்களைக் கண்டு அஞ்சி, தங்களைக் காக்க, மேலுலகத் தேவதைகளை அழைக்கும் புலம்பல்களும் வேண்டு கோள்களுமேயாகும்.

உபநிடதங்கள் பிற சமய உண்மைகளை மறுத்தோ, ஏற்பதுபோல் காட்டியோ, மாற்றிக் திரித்து மறு கோலம் செய்தோ, அனைத்தையும்

நயவஞ்சகமாக அழிப்பன. அவற்றில் அவர்களுக்கு என உரிய அத்துவைதம் ஒன்றே மிகப் பெரியது. மற்ற சமயங்களை அதனுள் அடக்க முயல்வதே விபரீதம். ஆதி சங்கரர் இதைச் செய்ய முயன்றார். இந்துமதப் பெயர் சூட்டி, தமிழர் சமயங்களின் பெயர்கள் உலகிடை விளங்காமற் செய்து விட்டார்.

ஆதி சங்கரர் செய்த அரிய செயல் ஆறு சமயம் சன்மதம் என்பதே. இதில் சைவம், வைணவம், சாக்தம் (சக்தி) என்ற வழிபாடுகள் மட்டுமே சமயங்களென உருப்படியானவை. இவற்றுடன் காணாபத்தியம், கௌமாரம், சௌரம் சேர்த்து இந்து மதப்பெயர் சூட்டி, முன்னைய சைவ வைணவமாம் தமிழர் சமயங்களைக் கீழே இறக்கிவிட்டமையில் அவர் வெற்றி பெற்று விட்டார்.

நமது நாயன்மார்களும் சமயச் சான்றோர்களும் சாதாரண மானவர்கள் அல்லர். வடமொழியாளரின் உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசிய உண்மை நிலைகளை நமக்கு விளங்கும்படி பாடி வைத்துள்ளனர்; நம் தமிழ்நெறிகளைக் காப்பாற்றியுள்ளனர்.

# திருக்கோயில் வழிபாட்டுச் சீர்திருத்தம்

தமிழர்களின் வாழ்வில் கோயில்கள் முக்கிய இடம் பெறுகின்றன. பிறநாடுகளில் அரிய காட்சிகள், அறிவியல் புதுமைகள், இயற்கைக் காட்சியகங்கள், நூலகங்கள் எனவும் பிறவாறும் பொழுது போக்கிற்கான வாய்ப்புகள் மிகப் பலவாகும். தமிழர்களுக்கோ கோயில்களும் திருவிழாக்களுமே வாழ்க்கை ஆகிவிடுகிறது.

இன்றைய கோயில் வழிபாட்டு முறைகளிலும் நிகழ்வுகளிலும் புரோகிதப் பார்ப்பனர்களின் செயற்பாடு மிகக் கூடுதலாகும்.

இங்கு நான் எனது தனிப்பட்ட சிந்தனைகளையே எழுதுகின்றேன். அவை இன்றைய நடைமுறையை விமர்சிப்பது போல இருக்கும். அவை யாரையும் கட்டுப்படுத்துவன அல்ல. ஏற்க இயலாதவர், வேற்றுக் கருத்தினர், மறுப்பவர் எல்லோரும் தத்தம் கருத்தின்படி நடக்கலாம். என்னுடைய கருத்து இது என்று அவர்கள் விட்டுவிடவேண்டுமே தவிர, பகைமை பாராட்டக் கூடாது.

## கோயில் வழிபாட்டில் அபிடேகம்

அபிடேகம் இறை உருவை, அது கல்லாயினும் வெண் கலமாயினும் பிற யாதாயினும் சுத்தம் செய்வதும், சுற்றிலும் தூய்மைப்படுத்துவதும் எனலாம். கருவறையை, சிலை இருக்குமிடத்தில் சுற்றுப்புறத்தை எல்லாம் சுத்தம் செய்வது இது. தேவாரத்தில் இதை ஒரு சடங்காகக் குறிக்கவில்லை.

## பூவும் நீரும் கொண்டு வழிபடல்

“சலம் பூவொடு மறந்தறியேன் என்பர்”.

"பொக்கம் மிக்கவர் பூவும் நீரும் கண்டு

நக்கு நிற்பன் அவர்தமை நாணியே" என்பது அப்பர் வாக்கு (பொய்யான நடிப்புடையவர்கள். பூவையும் நீரையும் கொண்டு வழிபட வருவது கண்டு இறைவன் வெட்கப்பட்டுச் சிரிப்பான் என்பது கருத்து)

"போதொடு நீர்சுமந்து ஏத்தி, புகுவார் அவர்பின் புகுவேன்" என்பதும் அப்பரின் பாடலே. இறைவனை வழிபட, பூவையும் நீரையும் எடுத்துக் கொண்டு ஒருவர் பின் ஒருவராகப் போகின்றவர்களின் பின்னே போகின்றாராம்.

இவ்வாறு நூற்றுக்கணக்கான இடங்களில் வருகிறது. நீர் - இறைத் திரு உருவைச் சுத்தம் செய்ய, பூ அலங்கரிக்க, அவை போதுமே.

புரோகிதப் பார்ப்பனர்கள் மக்களுக்குப் பயன்படுவன அனைத்தையும் இறைவனுக்கு என்று சொல்லி மக்களை எதனையும் நுகர விடமாட்டார்கள். பால், தயிர், தேன், பழங்கள் என மக்களுக்குப் பயன்படுவன பல, அபிடேகம் எனக் கல்திருவுருகில் ஊற்றப்படுகின்றன.

இறைவனை அலங்கரிக்க அகில், சந்தனம், பன்னீர் போன்ற நறுமணப் பொருள்கள் போதும். பாலபிஷேகம் என்று பெருமைப்படுத்திக் குடம் குடமாக ஊற்றுவது எத்துணைக் கொடுமை. இவற்றைப் பார்த்து இறைவன் அங்ஙனம் ஊற்றுபவர்களுக்கு, ஊற்றுவதன் அளவுக்கேற்ப நன்மைகள் செய்வானாம். பெண்கள் அபிடேகத்திற்கு என்று கணவனுக்கும் குழந்தைகளுக்கும் விருந்தினர்க்கும் பயன்படுத்தக்கூடிய பாலை இப்படி, பாத்திரங்களில் கொண்டு வந்து கோயிலில் பூசாரிகளிடம் கொடுக்கிறார்கள்.

அப்பர் பாடியது போல கடவுள், நக்கு நிற்பன் அவர்தமை நாணியே எனலாம். அப்படி நறுமணப் பொருள்களுள் ஒன்றாகப் பாலையும் கடவுளுக்குத் தரவேண்டுமேல், ஒரு சிறு அளவு போதுமே. நாளிதழ்களில், இரண்டு டாங்க் அளவு பால் அம்மனுக்கு அபிடேகம் செய்யப்பட்டது எனவும், ஊரார் அனைவரும் கொண்டு வந்து கொட்டிய பாலை புரோகிதப்பார்ப்பனர் சாமி தலையில் ஊற்றமுடியாமல், கை வலித்ததால், குழாய் மூலம் பால் அபிடேகம் செய்யப்பட்டது எனவும் செய்தி வெளியிடுகின்றனர்.

ஏழைத்தாய், மார்பில் பால் வற்றியதால் பால் தர இயலாமல், வெளியே முயன்று பால் வாங்கவும் காசின்றி அதுவும் இயலாமல் குழந்தை அழ, அத்தாயும் அழ இப்பரிதாபக் காட்சியை இப்புரோகிதப் பார்ப்பனர்கள் பார்ப்பதில்லை.

தமிழர்கள் வாழும் நாடெங்கும், உலகெங்கும் இவ்வாறு அபிடேகம் என்ற பெயரால் செய்யும் பாலின் அளவு, எத்தனை இலட்சம் லிட்டர் பால் என்று திருச்சி மருத்துவர் சுப. திருப்பதி ஒரு கணக்குப் போட்டுக் காட்டியபோது காதலாகிக் கண்ணீர் மல்கி உள்ளம் உருகியது. அட, புரோகிதர்களே! இந்தக் கொடுமையைக் கைவிட மாட்டீர்களா, இந்த மூடசனங்களுக்கு அறிவுரை சொல்லி, இதனாலெல்லாம் இறைவன் செல்வமும் பிற வரங்களும் எதுவும் தரமாட்டான் என்று கூறி, நல்வழியில் திருப்ப மாட்டீர்களா என்று நம் நெஞ்சம் கெஞ்சிக் கேட்கிறது. ஆனால் இதற்கு மறுதலையாக, அபிடேகங்களிலேயே பாலபிடேகம் தலையாயது என்று கூறி, மக்களுக்குப் பாலினால் கிடைக்கும் ஊட்டச் சத்துச் சேரவிடாமல் தடுக்கவல்லவா முயல்கிறார்கள்.

உடனே, இவன் நாத்திகன், பெரியார் தொண்டன், அதனால் நம்மைப் புண்ணியம் தேடவிடாமல் தடுக்கின்றான் என்று சொல்லித் திசை திருப்புவார்கள்.

நான் இறைவன் பக்கம் நின்றே பேசுகிறேன். அவர் தன் தலையில் பால் ஊற்றும் போது தடுத்துப் பேச முடியாததையே என் மூலமாகப் பேசுகிறார் என அறிவீர்களாக!

கோயிலுக்குள் நுழைந்ததும் ஒரு கூடையை ஐயரிடம் கொடுத்துவிட்டு, மற்றபடி தங்களைப் போல் வந்திருப்பவர்களுடன் பேசத் தொடங்கிவிடுவர். அச்சிறு கூடையில் பழம், தேங்காய், வெற்றிலை பாக்கு, தட்சிணைக்காகச் காசு எல்லாம் இருக்கும். ஐயர் அவர்க்குத் தெரிந்தபடி சௌகரியப்படி அருச்சனை செய்துவிட்டு, பணத்தை எடுத்துக் கொண்டு, 'கூடை யாரது?' என்று கூவி, அழைத்து, உரியவரிடம் அதைக் கொடுத்துவிடுவார்! இதுதான் இன்றைய அருச்சனை.

பழந்தேங்காய் வைத்து அருச்சனை செய்வது பற்றித் தேவாரத்தில் ஒரு சொற்கூட இடம் பெறவில்லை.

சோதிடப் புரோகிதர், உங்களுக்கு கிரகதோஷம் இருக்கிறது. புதன் கிழமை தோறும் அருச்சனை செய்யுங்கள் என்று சொல்லியனுப்ப, கோயில் புரோகிதர் அருச்சனை செய்வார். இருவருக்கும் வருமானம் தரும் இதுதான் அருச்சனை.

நம் நாயன்மார்கள் சொல்லாத இது எதற்கு? அருச்சனைச் சீட்டு வருமானம் போய்விடும் என்று வருந்த வேண்டாம்.

உண்மையான அருச்சனை என்பது கடவுளர் புகழை ஏத்தி ஏத்தித் தொழுவதாகும்.

திருக்கோயில் வழிபாட்டில் இரண்டு கருத்துக்கள் மிக முக்கியம். காசி விசுவநாதருக்கு இன்றும் நடைபெறுவது போல, பூவும் நீரும் கொண்டு, அவரவர் தாமே வழிபட வகை செய்ய வேண்டும்.

மக்களுக்குப் பயன்படும் பாலை அபிடேகம் என்ற புனிதப் பெயரால் வீணே ஊற்றி, இறைவனே வெறுக்கும்படி செய்வது தவிர்க்கப்பட வேண்டும்; அது போலவே நல்லன எல்லாம் தரும் ஹோமம் என்று அக்கினியில் போட்டு ஆகுதி செய்வது நிறுத்தப்பட வேண்டும்.

திருவள்ளுவர் பண்புகளின் திருவுருவமாகக் கடவுளைக் கண்டார். நாமும் அவ்வழியில் நடப்பதே நல்லது. அவர் 'இறைவனின் பொருள் சேர் புகழைப்' பாடி வணங்கச் சொன்னார். சிவபுராணம் போல, இறைவன் புகழை ஏத்தி, ஏத்திப் பாடிப் புரவுதலே வழிபாடாகும்.

சமய மறுமலர்ச்சியே சமுதாய மறுமலர்ச்சியாகும். இறைவழிபாட்டுச் சமய நெறிகளில் சீர்திருத்தம் வந்தால் மட்டுமே ஏழைகள் வாழ்வில் இன்பம் விளையும் மனித வாழ்வு நிறைவுடையதாகும்.

மீனாட்சி
புத்தக நிலையம்